1473

Regd. No. M. 2210 வருஷ சந்தா ரூ 1-8-0.

...OR & ...ETOR } வை. மு. கோதைநாயகி அம்மாள்.

# JAGANMOHINI

மலர் V.] [இதழ் 6.



OFFICE OF THE REGISTRAR OF ... MADRAS
28 JUN 1928

தனிப் பிரதி அணா 3.

JL
ஊ211, N22JM
N28 . 5 . 6
182846.

ஜகன்மோகினி ஆபீஸ்.

26, தேரடித் தெரு. : : திருவல்லிக்கேணி, மதராஸ்.

குறிப்பு:—ஒவ்வொரு மாதமும் கடைசித் தேதிக்குள் சஞ்சிகை வெளியாகும்.

## நமது சந்தா நேயர்கட்கு முக்கிய அறிவிப்பு.

பிரதி ஆங்கில மாதமும் கடைசித் தேதியில் நமது பத்திரிகையை எல்லா சந்தா நேயர்களுக்கும் அனுப்புகிறோம். அங்ஙனமிருக்க சிலர் அடுத்த சஞ்சிகை வந்தபிறகு முன் மாதத்து சஞ்சிகை வரவில்லையென்றும், நாம் அனுப்பத் தவறிவிட்டதாகவும் எழுதுகிறார்கள். இன்னும் சிலர் 2, 3 மாதங்கள் கழித்து சஞ்சிகை வரவில்லையென்கிறார்கள். இது மிகவும் விசனிக்கத் தக்கதே. ஒரு மாதத்து சஞ்சிகை அடுத்த மாதம் 10 தேதிக்குள் உள் நாட்டு சந்தா நேயர்களுக்கும், 15 தேதிக்குள் வெளி நாட்டு சந்தா நேயர்களுக்கும் கிடைக்காவிட்டால் தபாலில் தவறிவிட்டதெனத் தெளிந்து உடனே நமக்குத் தெரிவித்தால் வேறு சஞ்சிகையையனுப்புவோம். அப்படிச் செய்யாதவர்களுக்கு மூன்று அணா ஸ்டாம்பு அனுப்பினால்தான் வேறு சஞ்சிகை அனுப்பப்படும்.

நமக்கு எழுதும் கடிதத்தில் தங்களது சந்தா நம்பரை மறக்காமல் குறிப்பிடவேண்டும்.

இடம் மாறும் சந்தா நேயர்கள் புது விலாசத்தை உடனே நமக்குத் தெரிவிக்கவேண்டும். அப்படித் தெரிவிக்காததால் சஞ்சிகை தவறி விடின் அதற்கு நாம் ஜவாப்தாரியல்ல.

மானேஜர்:—:"ஜகன்மோகினி" ஆபீஸ்
திருவல்லிக்கேணி சென்னை

---


## "ஜகன்மோகினி"யின் முதல் இரண்டு ஆண்டுகளில் வெளிவந்த நாவல்கள்

மலர் I. ஸ்ரீமான் வடுவூர் கே. துரைசாமி அய்யங்கார் எழுதிய
காளிங்கராயன் கோட்டை ரகசியம் (2-பாகங்கள்) ரூ. 4 0 0

மலர் II. விலாஸவதி (2-பாகங்கள்) ரூ. 3 0 0

ஸ்ரீமான் அ. முத்துகிருஷ்ணன் எழுதியவை.

கனக சபை .... .... ரூ. 1 8 0
கோகிலம் .... .... ரூ. 0 6 0

"ஜகன்மோகினி" ஆபீஸ்
26, தோடித் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை.

உ
ஓம்

# ஜகன் மோகினி

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு
ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி ! மனத்தைச் சார்ந்து


| மலர் V | விபவஹு வைகாசிமீ May 1928. | இதழ் 6 |
| --- | --- | --- |


## கடவுள் வணக்கம்

### திருவல்லிக்கேணி பஞ்சரத்நம்

ஸ்ரீராமபிரான் துதி

3. தேவர்கள் குறை தீர்க்க தயரதன் மனமகிழ
சேயாக உதித்து நின்தன்
திருவாழி சங்கமும் இருசோதரர்களாய்
சேடனே இலக்குமணனுய்
மேவியே ஸீதையை மணம்செய்த மாயநின்
மேன்மைதான் புகழ வெளிதோ !
மின்னிடைவைதேகியை இம்சித்த காகத்தை
விரும்பியே காத்தகோனே!
தாவியே நின் சரண் பற்றிய சுக்ரீவற்கும்
சார்ந்த விபீஷணற்கும்
தாரணிபுகழ்ந்திடத் தஞ்சமதளித்துப்பின்
தானவரைக் கொன்றொழித்துப்
பாவையுடன் சோதரர்கள் புடைசூழத்திருவல்லிக்
கேணிதனில் பண்பாகவே
பக்தனும் அனுமனேடு பாங்காக வீற்றருளும்
பரமனே சரணம் கோனே!

(தொடரும்)

வை. மு. கோ.

REGISTRAR OF BOOKS 28 JUN 1928 MADRAS

# அநுபவ நீதிசாரம்.

(39) மனிதர்க்கு வயதாகி விருத்தாப்பியம் வரும் காலத்தில் ஆணவம் வலிமை, தைரியம் முதலியவை மறைந்துபோய்விடுகின்றன. ஆனல் அவர்களுடைய 'அற்பபுத்தியும் துற்குணமும் மட்டும் உயிருள்ளளவும் விலகுவதேயில்லை.

(40) "உன் வீட்டுக் கலியாணத்திற்கு உனக்கு கஷ்டமேவேண்டாம். ஊரழைப்பது முதல் ஊருக்கனுப்பும் வரையில் சகலமான வேலையையும் நானே செய்துவிடுகிறேன்" என்று சொல்லிய மனிதர்களை சாப்பாட்டு நேரத்திற்குக் கண்டு அழைத்து வருவதற்குள் வீட்டுக்காரன் பாடு திண்டாட்டமாய்விடுகிறது என்றால் அவர்கள் செய்துள்ள வேலை எவ்வளவிருக்கும்?

(41) கலியாண வீடு சென்று திரும்பிய ஓர் மாதை கலியாண விமர்சை எவ்விதமெனக் கேட்டால், "ஐயோ! கலியாணவீட்டுச் சோற்றைத் தவிர மற்ற பலகாரங்களைக் கண்ணிலும் பார்க்கவில்லை" என்று தூற்றுவாள். ஆனல் உண்மையில் அவளது மூட்டையை அவிழ்த்தால் முற்றும் பக்ஷணமாகவே இருக்கும்.

(42) "வெகு ஆபத்தான தருணம்; பக்கத்து வீதியில் சென்று என் தாயாரை அழைத்து வாருங்கள் புண்ணியமுண்டு" என்று ஒருவரை வேண்டுகையில் அவர் கால்வலி நடக்கமுடியாதென்று சொல்லிய அத்தருணமே மற்ருருவர் " தமக்குப் பணங் கொடுக்கவேண்டிய கடன்காரன் நாலாவது தெருவில் வந்திருக்கிருன்" என்று கூறினல் உடனே அம்மனிதன் எழுந்து குண்டோட்டம் குதிரையோட்டம் ஓடுகிருன். என்னே வஞ்சகம்!

(43) பக்கத்துவீட்டில் தான் வாங்கிய கடனைக் கொடுப்பதற்கு 10 வருடமேனும் நினைவற்றுவிடுகின்றது. தன்னிடம் காலணு பிறர் வாங்கினல் தினம் 12 தரம் நடக்க நினைவு வருகிறது. ஈதென்ன எண்ணமோ?

(44) கலியாணத்திற்குச் செல்வதற்கும் விருந்துண்பதற்கும் ஆசையாகத்தானிருக்கிறது. ஆனல் ஓதியிடவேண்டுமே!

(45) "உண்ணும் வேளைதான் இலையில் காணலாம் உங்கள் தங்கையை" என்கிருள் ஒரு மனைவி. ஆனல் தான் தாய் வீடு சென்ருலோ உண்பதற்கும் அம்மாளிருப்பிடத்தைத் தேடவேண்டும்.

(46) தன் நாத்திக்கு தன் புருஷன் மஞ்சள்காசு கொடுத்தால் அவள் முகங் கோணுகின்றது; ஆனல் தனக்கு ஜோடிசேலை வாங்கியனுப்பும்படித் தன் அண்ணனுக்குக் கடிதமெழுதுகிருள்.

(47) தன் மகளது சங்கீதஞான சூன்யத்தை யறியாது பாடகனைத் திட்டுவதேன்?

(48) உன் அஜாக்ரதையினல் கெட்டுவிட்ட பண்டத்திற்கு குழந்தையை அடித்தால் சரியாகிவிடுமோ? உன் கணவன் கோபம் தணியுமா?

(49) மாமி வீட்டில் வேலைசெய்து மகள் இளைத்துவிட்டாளாம். தன் நாட்டுப்பெண்ணுக்கோ இரவிலும் நித்திரைசெய்ய நேரமில்லை.

182846.

(50) பசியதிகரித்தால் சினமதிகரிக்கின்றது. சினமதிகரித்தால் பிறரிடம் மனஸ்தாபமுண்டாகிறது. இந்த வேதனையை அடையாதிருக்க முதலிலேயே பொறுமை என்னும் உணவை ஊட்டியிருந்தால் தொல்லையே இல்லை.

(51) மகனுக்கு விவாகமாகும் பரியந்தம் வீதியில் தினம் 10 வாடகை மோட்டார் நிற்கும். விவாகமான பிறகோ ரிக்ஷா காண்பதுமரிதே!

(52) தன் மாமி மாமனிடம் தனித்துப் பேசவிடாது கணவனைக் கட்டு செய்யும் மனைவி தான் அவர்களிடம் எவ்விதம் நடந்துகொள்வாள் என்பதைக் கூறவேண்டுமா?

(53) இன்பமென்பது கடலைப்போன்று கரைகாணாதது. அதனை முற்றுமனுபவித்தார் இல்லை. ஆனால் அது கரையுள்ளதாகத் தோற்றலாம்.

(தொடரும்)

வை. மு. கோ.

---

## ஹாஸ்யத்துணுக்குகள்.

**நாட்டுப்புறத்து தனிகன்:**—ஐயா! வயித்தியக்காரரே! பையன் வாயிலே எதையோ வச்சிங்களே! அதுலே ஜொரம் தெரியுமாமே! எம்பிட்டு ஜொரமிருக்குதுங்க?

**வயித்தியன்:**—ஜ்வரமதிகமாகஇல்லை; 101 தான் இருக்கிறது. இந்த மருந்தைக் கொடுங்கள்; நான் நாளை வருகிறேன். (போய்விட்டார்).

**நாட்டு:**—ஐயையோ! அடேபாவிமகனே! இந்த எளவு வயித்தியன் எஞ்சிருந்து வந்தான்? சனியன் பிடித்தவனை பெரியவயித்தியனிண்ணும் ரவ நேரத்திலே லகுவாக்கிடுவாண்ணும் சொல்லிக்கிண்ணுங்களேண்ணு வரவயிச் சாக்கா பாவிதலையிலேயே கல்லெபோட்டமாதிரி 101 ஜ்வரம்முண்ணு சொன்னானே! ஏதோ, 30 40—ண்ணு சொல்லுவான்னல்ல பாத்தேன். ஒரேடியாய் 101 இண்ணுப்புட்டானே! என்ன செய்வேன்?

**குரும்பன்:**—ஐயா! (நகைத்தபடியே) என் திட்டுகிறீர்? அவர் உமக்கு நன்மையையே சொல்லிச் சென்றார். அதாவது வாயில்வைத்த அந்தக்கருவி ஜோஸியக்கருவி. அதில் 101 வயது உமது மகனிருப்பானென்று காட்டியதை உண்மையாகக் கூறினார். ஏனெனில் தாங்கள் தனிகராயிற்றே என்றதனால் ஆயுசைத் தெரிவித்தார். நீர் வீணே வருந்தாதீர்.

**நாட்டு:**—ஆ! அப்படியா! ஆன வயித்தியனுக்கு 50 ரூபாய் தருகிறேன்.

* * * * *

**கோவிந்தன்:**—ஏன் ராயரே! சென்றவாரம் பார்த்தபோது மீசை முறுக்காக விருந்ததே, இன்று காணவில்லையே! ஏன் ஏதேனும் தீட்டு வந்து விட்டதோ!

**ராயர்:**—தீட்டொன்றுமில்லை. என் பெண்சாதி திட்டினள்......... அதற்காக அடித்துவிட்டேன்.

* * * * *

ஓர் கலியாண வீட்டில் இரு பெண்கள் தட்டில்விழும்தக்ஷிணைக்கு ஆசைப்பட்டுக்கொண்டு ஆலத்தி எடுக்கபந்தலில் தட்டோடு வந்தார்கள். இருவருக்கும் மங்களம் பாடத்தெரியாது. வேதகோஷமும் வாத்யகோஷமும் பலமாக முழங்குவதால் அந்த பெண்களில் ஒருத்தி "நான்செய்யும் தந்திரத்தைப் போலவே நீயும் செய்துவிடு" என்று முன்னாலேயே சொல்லிக்கொண்டு வந்தபடியால் அவள் "மங்களம்; ஜெயமங்களம். இரவும் நாமே வந்தால் மங்களம் பணம் கிடைக்கும் சுபமங்களம். ஐந்துநாளை விவாகத்தில் மங்களம். 5 ரூபாயேனும் சேர்ந்தால் மங்களம் பெங்களூரு சரிகை ரவிக்கை மங்களம். புதிதாக தைத்துக்கொள்ளலாம் மங்களம்." என்று மங்களம் என்பதைமாத்திரம் உரத்த குரலால் ராகமாகப் பாடுவதுபோலப் பேசி முடித்தாள். அங்கு கூடியிருந்த மனித கோஷ்டிகளுக்கு அங்குள்ள கோஷத்தினால் இவர்களுடைய வாயசைவதும் குரல் சற்று கேட்பதும் மட்டும் தெரிந்ததேயன்றி இவர்களுடைய சூழ்ச்சியையாருமறிந்தாரில்லை. வம்படித்து மங்களம் எடுத்து காசைப் பெற்றுக்கொண்டு பெண்கள் சென்றார்கள்.

* * * * *

**நீலன்:**—ஐயா! வைத்தியரே! (ஓ வெனப் புலம்புகிறான்)

**வைத்தியன்:**—ஏனையா புலம்புகிறாய்? என்ன உடம்பு உனக்கு?

**நீலன்:**—ஐயோ! நேற்று இரவு படுத்துக் கொள்ளும்வரையில் உடம்பு ஒன்று மில்லை. பிறகு நித்திரையில் ச்வப்பனத்தில் நான்படுத்திருந்த அறையில் நாலைந்து திருடர்கள் நுழைந்து என் பெண்ஜாதியின் நகைகளை எல்லாம் திருட ஆரம்பித்ததை நான் பார்த்ததும் நடுங்கி எழுந்திருக்கப் போனால் கால் எழுந்திருக்க முடியவில்லை; கூச்சலிடப்போனால் தொண்டை கிளம்பவில்லை. கண்ணைத்திறந்து நன்றாகப் பார்ப்பதற்கு கண் திறக்கவில்லை. அச்சமயம் நான் என்ன அவஸ்தைப் பட்டேன் தெரியுமா! பிறகு என் பெண்டாட்டி என்னை எழுப்பினாள். திருடனும் நல்லவேளையாக திருடாது போய்விட்டான். ஐயா! இத்தகைய நோய் எனக்கு இதுவரையில் வந்ததில்லை. இது மிகவும் பயங்கரமாகவிருக்கிறது. இனி இவ்விதமான நோய் வாராதிருக்க மருந்து தாருங்கள். ஐயா! உமக்கு மெத்த புண்ணியமுண்டு.

**வைத்தியன்:**— (நகைத்தபடியே) ஓகோ! இந்த வியாதிக்கு இப்போதுமருந்தில்லை. உனக்கு மறுபடியும் சொப்பனத்தில் இவ்விதம் வரும்போது என்னிடம் வந்தால் மருந்து தருகிறேன்.

* * * * *

**வாலிபர்:**— தாத்தா! தமது அறுபதாம் விவாகத்திற்கு வந்துள்ள எங்களுக்கு சந்தோஷம் பொங்குகிறதே! கலியாணப் பிள்ளையாகிய தமக்கேன் சந்தோஷமே இல்லை?

**பாட்டன்:**—உங்களுக்கு தமாஷான கச்சேரியும் தரமான சாப்பாடும் கிடைப்பதைப்பற்றி நீங்கள் சந்தோஷப்படுவது நியாயந்தான். இத்தனை வயது சென்று கட்டும் தாலியை அந்தக் கிழவிக்குத்தானே மறுபடியும் கட்ட வேண்டும்? சிறிய பெண்ணுக்குக் கட்டுவதானால் நானும் குதிப்பேன்.

* * * * *

**ஒருவன்:**—ஐயா! உம்மை பெரிய குடிகாராக உமது பிதா செய்யப் போகிறாராமே மெய்தானா!

**மற்றொருவன்:—** என்ன! என் பிதாவா! குடிப்பவர்களைக் கண்டாலே எங்களுக்குப் பிடிக்காது. அவமரியாதையாகக் குடிப்பதும் நடிப்பதும் என்ன விளையாட்டையா?

**முதல்வன் :—** ஐயையோ! என்ன விபரீதமாக அர்த்தம் செய்துவிட்டீர். நான் சொல்லியது கள்குடியல்லவே! குடிகாரர் என்றால்,—உமக்கு விவாகம் செய்விக்கப்போகிறாராம். விவாகம் செய்தால் நிறைய குழந்தைகள் பிறந்துவிடும்; பின்னர் நீர் ஓர் பெரிய குடித்தனக்காரர்தானே என்ற நோக்கத்துடன் குடிகாரரென்றேன். இது சரியில்லையா?

* * * * *

**கிழவர் :—** ஏனம்மா? உன் புருஷனுக்கு மூன்று கண்களிருக்கின்றனவாமே உண்மையா!

**பெண்:—**என்ன! என் புருஷனுக்கு மூன்று கண்களா! இதென்ன கட்டுக் கதை? யார் சொன்னது?

**கிழவர்:—** கோபிக்காதே யம்மா! உன் புருஷருக்கு முதலில் நீ கண்ணகை விருந்தாயாம். பின்னர் ஓர் வேசி கண்ணகை விருந்தாளாம். தற்போது ஓர் கிருஸ்தவச்சி கணணுட்டியாக உள்ளாளாமே? அதனுல் மூன்று கண்களென உரைத்தேன்.

வை. மு. கோ.

---

## பரிசுகளின் விவரம்.

ஐந்தாவது சஞ்சிகைக்குப் பிறகு பணம் அனுப்பியவர்களில் கீழ்கண்டவர்களுக்கு பரிசுகள் விழுந்திருக்கின்றன.

சந்தா நெம்பர்.

2596. A. V. Ramachandra Chettiar, Salem

485. T. Devarajan, Karachi

மேற்கூறியவர்கள் தமக்கு வேண்டிய புத்தகங்களைத் தெரிவித்தால் அனுப்புகிறோம்.

அடுத்த சஞ்சிகை வெளியாவதற்குள் சேரும் சந்தா நேயர்களுக்கும் இதே மாதிரி இரண்டு பரிசுகள் கொடுக்கப்படும். பழைய சந்தாதாரர்கள் தங்களது சந்தா நம்பரை அவசியம் தெரிவிக்கக் கோருகிறோம்.

---

**_Rs. 800 in Prizes._**

Closing date of Anagrams Competition No. 2 and X-words Competition No. 5 has been extended to 15th June 1928. Apply for leaflets.

The Manager

Post Box No. 244.

Madras.


இனம்! இனம்!

முற்றிலும் இனம்!

'C' ரிஜிஸ்டர்! 'C' ரிஜிஸ்டர்!

டைம்பீஸ் டைம்பீஸ்

இனம். இனம்.




எங்களின் "தாரா" லீவர் 18-காரட்டு ரோல்டுகோல்டு பாக்கட் கடியாரம் பின்புறம் சித்திரவேலை செய்யப்பட்டதை வாங்குகிறவர்களுக்கு "C" டைம்பீஸ் இனமாக அனுப்பப்படும். விலை பாக்கட் கடியாரம் 1-க்கு இனமுடன் ரூ. 5. இக்கடியாரத்தில் உள்ள டையலின் பேரில் ஐந்து வருஷம் உத்திரவாதம் என்று அச்சிடப்பட்டிருக்கிறது. முந்துங்கள்.

காப்டன் வாச் கம்பெனி, தபாற்பெட்டி நெ 265, மதருஸ்.

---


ஒரு மாதம்

பாதிவிலை! பாதிவிலை!

வரையிலும்

அசல் விலை ரூபாய் 14.

பாதி விலை 7



ஸ்வான் ஹவுஸ்.

தபால் நெ, 508, பி, டி, மதராஸ்.

22 காரட் ரோல்டு கோல்டு கைகெடியாரம் 10 வருஷம் உத்திரவாதம். பார்வைக்கு அழகாயும், இக் கெடியாரங்களில் எம்மாதிரி ஷேப் ஆனபோதிலும் அனுப்பி வைக்கப்படும். பாதிவிலை ரூ 7. ஒவ்வொரு கெடியாரமும் ஒரு பட்டு பட்டையுடன் அனுப்பி வைக்கப்படும்.

## ஸ்ரீமான்-வடுவூர் கே. துரைசாமி ஐயங்கார் எழுதியவை

| | ரூ. | அ. |
|---|---|---|
| பூர்ண சந்திரோதயம் 1,2,3,4 | 7 | 8 |
| மாயாவிநோதப் பரதேசி 1,2 | 5 | 0 |
| மதனகல்யாணி 1,2,3 | 4 | 8 |
| காளிங்கராயன் கோட்டை ரகசியம் 1,2 | 4 | 0 |
| கும்பகோணம் வக்கீல் 1,2 | 3 | 0 |
| மேனகா 1,2 | 3 | 0 |
| விலாஸவதி 1,2 | 3 | 0 |
| பாலாமணி | 2 | 8 |
| சௌந்தரகோகிலம் 1,2,3 | 6 | 0 |
| கனகாம்புஜம் 1, 2, | 2 | 12 |
| வஸந்த மல்லிகா | 1 | 8 |
| வித்யாஸாகரம் | 1 | 4 |
| திவான் லொடபடசிங் பகதூர் | 0 | 12 |
| மாணிக்க வாசகர் | 0 | 8 |
| வஸந்தகோகிலம் | 1 | 0 |
| மாயசுந்தரி | 0 | 12 |

வத்ஸா கம்பேனி,
திருவல்லிக்கேணி.

## "கிருஷிகன்"

ஓர் மாதாந்த விவசாயப் பத்திரிகை.

பத்திரிகாசிரியர்கள்:....

(1) ராவ்பஹதூர் ஜெ. செல்வரங்க ராஜு
பென்ஷண்ட் விவசாய டெப்டி டைரெக்டர்

(2) J. R. ரங்கராஜு

வருஷ சந்தா தபால் கூலி உள்பட ரூபாய் ஒன்றுதான்.

எல்லோரும் சுலபமாய் அறிந்து கொள்ளக்கூடிய எளிய நடையில் கிருஷிகருக்கு அனுகூலமுண்டாகக் கூடிய வழிகளை எடுத்துக் காட்டுவதிலும், கிருஷிகருக்கு ஏற்படும் சந்தேகங்களை நிவர்த்திப்பதிலும் "கிருஷிகனு"க்குச் சமானமான பத்திரிகை கிடையவே கிடையாதென்பது நிச்சயம்.

"கிருஷிகன்" பத்திரிகையானது சுயநலத்தைக் கருதாது விவசாய அபிவிருத்தியையும், அதன் மூலமாய் தேசக்ஷேமத்தையும் கருதி வெளிப்படுவதால் வருஷ சந்தா தபால் கூலி உள்பட ரூ ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது.

வி. பி. மூலமாய் அனுப்பினால் ரிஜிஸ்ட்ரேஷன் கூலி சேர்த்து ரூ 1-4-0 ஆகும். ஆகையால் உடனே ரூ. ஒன்று மணியார்டர் செய்து தங்கள் பேர்களைப் பதிவு செய்து பத்திரிகை பெற்றுக் கொள்ளுங்கள்.

மானேஜர் "கிருஷிகன்" ஆபீஸ்,
"ஜகந்நாதபாக்" சைதாப்பேட்டை, சென்னை.

(50) பசியதிகரித்தால் சினமதிகரிக்கின்றது. சினமதிகரித்தால் பிறரிடம் மனஸ்தாபமுண்டாகிறது. இந்த வேதனையை அடையாதிருக்க முதலிலேயே பொறுமை என்னும் உணவை ஊட்டியிருந்தால் தொல்லையே இல்லை.

(51) மகனுக்கு விவாகமாகும் பரியந்தம் வீதியில் தினம் 10 வாடகை மோட்டார் நிற்கும். விவாகமான பிறகோ ரிக்ஷா காண்பதுமரிதே!

(52) தன் மாமி மாமனிடம் தனித்துப் பேசவிடாது கணவனைக் கட்டு செய்யும் மனைவி தான் அவர்களிடம் எவ்விதம் நடந்துகொள்வாள் என்பதைக் கூறவேண்டுமா?

(53) இன்பமென்பது கடலைப்போன்று கரைகாணாதது. அதனை முற்றுமனுபவித்தார் இல்லை. ஆனால் அது கரையுள்ளதாகத் தோற்றலாம்.

(தொடரும்)

வை. மு. கோ.

---

## ஹாஸ்யத்துணுக்குகள்.

**நாட்டுப்புறத்து தனிகன்:**—ஐயா! வயித்தியக்காரரே! பையன் வாயிலே எதையோ வச்சிங்களே! அதுலே ஜொரம் தெரியுமாமே! எம்பிட்டு ஜொரமிருக்குதுங்க?

**வயித்தியன்:**—ஜுரமதிகமாகஇல்லை; 101 தான் இருக்கிறது. இந்த மருந்தைக் கொடுங்கள்; நான் நாளை வருகிறேன். (போய்விட்டார்).

**நாட்டு:**—ஐயையோ! அடேபாவிமகனே! இந்த எளவு வயித்தியன் எஞ்சிருந்து வந்தான்? சனியன் பிடித்தவனை பெரியவயித்தியனிண்ணும் ரவ நேரத்திலே லகுவாக்கிடுவாண்ணும் சொல்லிக்கிண்ணுங்களேண்ணு வரவயிச் சாக்கா பாவிதலையிலேயே கல்லெபோட்டமாதிரி 101 ஜுரம்முண்ணு சொன்னானே! எதோ, 30 40—ண்ணு சொல்லுவான்னல்ல பாத்தேன். ஒரேடியாய் 101 இண்ணுப்புட்டானே! என்ன செய்வேன்?

**குரும்பன்:**—ஐயா! (நகைத்தபடியே) ஏன் திட்டுகிறீர்? அவர் உமக்கு நன்மையையே சொல்லிச் சென்றார். அதாவது வாயில்வைத்த அந்தக்கருவி ஜோஸியக்கருவி. அதில் 101 வயது உமது மகனிருப்பானென்று காட்டியதை உண்மையாகக் கூறினார். ஏனெனில் தாங்கள் தனிகராயிற்றே என்றதனால் ஆயுசைத் தெரிவித்தார். நீர் வீணே வருந்தாதீர்.

**நாட்டு:**—ஆ! அப்படியா! ஆனா வயித்தியனுக்கு 50 ரூபாய் தருகிறேன்.

*　　*　　*　　*　　*

**கோவிந்தன்:**—ஏன் ராயரே! சென்றவாரம் பார்த்தபோது மீசை முறுக்காக விருந்ததே, இன்று காணவில்லையே! ஏன் ஏதேனும் தீட்டு வந்துவிட்டதோ!

**ராயர்:**—தீட்டொன்றுமில்லை. என் பெண்சாதி திட்டினாள்......... அதற்காக அடித்துவிட்டேன்.

*　　*　　*　　*　　*

கெட்டி சாயம் ! உயர்ந்த உடை !! விலை நயம் !!!

உயர்தரமான பம்பாய் கெட்டிச் சாயமுள்ள

## கலர் புடவைகள்

இவைகள் தினந்தோறும் தோய்த்து அணியத் தக்கவை. கெம்புரோஸ், ஆரஞ்சு, பச்சை, சாக்லேட் நிறங்களில் கிடைக்கும். பெண்மணிகளைத் திருப்திப்படுத்த பளபளப்பும் வசீகரத்தோற்றமும் கொண்ட இவ்வாடைகளை வாங்குதலே சரி.

அளவு 18 × 2¾ முழங்கள்.

முதல் ரகம் விலை ரூ. 5-8-0 2-வது ரகம் ரூ. 4-8-0 பூக்கொடிக்கரை நெய்து முந்தாணியில் பூவேலை செய்திருக்கும் உருப்படி 1-க்கு ரூ. 1-8-0 அதிகம்.

## ஜர்மன் சில்க் புடவைகள்

**சாதா :** மயில் கழுத்து, பொன் வண்டு, மேகவர்ணம், மாந்துளிர், பச்சை, அரக்கு, கருப்பு முதலிய எல்லாக் கலர்களிலும் கிடைக்கும். பெங்களூர் முந்தாணி போட்டது. கலர் கெடாதது. மனோகரமான மழமழப்பு. பளபளப்பு மாறாதது. ரம்மியமான தோற்றமுள்ளது. நேர்த்தியான நெசவு கொண்டது. நீடித்து நிற்பது. உறுதியானது.

18 × 2¾ முழங்கள் விலை ரூ. 11-8-0
ரவிக்கை துண்டு 1-க்கு 0-11-0

**கோட்டடி :** கரைகளில் பேட்டு வைத்து உடலில் பவழக் கொடி, தந்திக் கம்பி, டில்லி தர்பார் முதலிய தினுசுகள்

18 × 2¾ விலை ரூ. 12-8-0
ரவிக்கை 1 முழம் 0-12-0

மேற்படி பிளைன், கொட்டடி தினுசுகளில் ருத்திராக்ஷப் பேட்டு வைத்து தலைப்பிலும் ஜரிகை (கருக்காதது) வேலை செய்ய உருப்படி 1-க்கு 3-0-0 அதிகம்.

குறிப்பு.—உத்தம உடைகளுக்கு உத்தரவாதம். ஆகவே நல்ல சரக்குகளை இங்கேயே வாங்குங்கள். ஆர்டருடன் கால் பங்கு முன் பணமனுப்புக. தபால் கூலி வேறு.

ஒரே சமயத்தில் 100 ரூபாய் சரக்கு வாங்குபவர்க்கு 1 ரூபாய்க்கு 0-1-6 வீதம் குறைக்கப்படும்.

ஸிட்டி நெசவுச் சாலை,
65, அரமனைக்கார வீதி,
ஜி. டி. சென்னை.

ஏஜண்டுகள் தேவை.

## 8-வது அதிகாரம்

### விலை மகளின் வலை.

தன்னை மீறிய மோகத்துடன் மெய்மறந்து அபாரமான உற்சாகம் மேலிட்டவனாய்த் தாசி மைலா வீட்டில் உட்கார்ந்திருந்த நமது மணிவண்ணன் அவளது தரிசனம் திரும்பக் கிடைக்கும் நேரத்தை எதிர்பார்த்துக் கொண்டேயிருந்தான்; அவள் கொணர்ந்து வைத்த வாஸனாதி தாம்பூலத்தைப் போட்டுக்கொண்ட வண்ணம் பேசத்தொடங்கி, "ஆகா! என்ன பாக்குத்தூள்! என்ன துளிரான வெற்றிலை பாட்டீ! இந்தப் பாக்குத்தூள் தாங்களே செய்ததுதானோ?" என்று மெல்ல வார்த்தையை விட்டான்.

இதைக் கேட்ட கிழவி ஒருமாதிரியாகப் பார்த்தபடியே பேசத்தொடங்கி, "உம். இது என்ன அதிசயமான பாக்குத்தூள்! ஐயா வீட்டில் தினம் போடாத தூளா இது? இந்த ஏழைகள் செய்திருப்பது தமது பிரியத்தால் உயர்வாகத் தோன்றலாம். தங்களுடைய உயர்வான விசுவாச குணம் இதிலிருந்தே தெரிகின்றது பாருங்கள். என்னவோ! நமது குழந்தைக்கு முழுப்பாக்குப் பிடிக்காது. ஆகையால் அதுவே செய்த பாக்குத்தூள்தான் இது" என்று கிழவி சொல்லிக் கொண்டே வருகையில் மணிவண்ணன் தட்டிலிருந்த பொடி முழுவதையும் ஸ்வாஹா செய்துவிட்டான்.

தட்டில் பொடியில்லாமையை யறிந்த கிழவி, உரத்த குரலால் "அம்மா, மைலா! என்ன அசட்டுக் காரியம் செய்தாய்! பாக்குத்தூளை நிறைய வைக்காமல் கொஞ்சம் வைத்தாயே! ஐயாவுக்கு இந்தத்தூள் மிகவும் ருசியாக இருக்கிறதாம். இன்னும் கொஞ்சம் கொண்டுவா" என்றாள். ஆகா! இவள் கூறுவதைக்கேட்ட மணிவண்ணன் அகமகிழ்ந்து, நகைமுகம் மலர்ந்து, தேகம் பூரித்துப் புளக மடைந்து அவ்வறையின் கதவை எதிர் பார்த்தபடியே தேன்குடித்த நரிபோல் பல்லைப் பிளந்துகொண்டு உட்கார்ந்திருந்தான். அத்தருணம் முன்போலவே அந்த மின்னாள் ஓர் சிறிய கிண்ணத்தில் பாக்குத்தூளை எடுத்துக் கொண்டு அன்னத்தைப்

பழித்த நடையுடன் வந்து தூளை முன்னிருந்த தட்டில் கொட்டி விட்டு "குழலோ! யாழோ!" வென ஐயுறும்படியான தொனியினுல் "வெற்றிலை இன்னும் கொஞ்சம் கொண்டுவரட்டுமா!" என்று நகைத்தவாறு வினவிய வண்ணம் நாணிக்கோணியபடியே நின்ருள்.

ஆகா கா கா! என்னவென்று தான் இயம்புவது! மணிவண்ணன் நிலைமையை விவரித்துக் கூறுவதற்கே சாத்யமன்று! அவன் எதிர் பார்த்திருந்தபடி தரிசனம் கிடைத்ததோடு தன்னை நோக்கி அவள் இனியமொழி கூறக்கேட்டதும் அவனுடைய மனவெழுச்சி முன்னிலும் பன்மடங்கு அதிக்ரமித்து அபாரமாகப் பொங்கி ஓடியது. அவளது எழிலைப் பார்ப்பதா, கேட்டதற்குப் பதில் கூறுவதா என்பதை யறவே மறந்தவனுய் அந்த மின்னுளைப் பார்த்த வண்ணமாகவே அவள் கேட்டதற்குப் பதில் கூருமலிருந்ததுடன் அவள் கரத்தைப் பற்ற மெல்லத் தனது கரத்தை நீட்டவாரம்பித்தான்.

இவனுடைய மோகலாகிரியான நிலைமையை முற்றும் நொடியிலறிந்துகொண்ட கிழவியும் மைலாவும் தமக்குள் நகைத்தபடியே ஒருவரோடொருவர் சைகை செய்துகொண்டார்கள். மீண்டும் அவ்வணங்கு சற்று விலகி நின்றபடியே "அம்மா! ஐயா அவர்களுக்கு வெற்றிலை வேண்டுமா, கேட்டுத்தெரிவி; நான் கேட்டதற்குப் பதில் கூற இஷ்டமில்லைபோல் தெரிகிறது. நீ கேட்டுத் தெரிவி!" என்று வெகு மாயஜாலமாய்க் கூறினுள்.

இது கேட்ட கிழவி, "சீ! அவ்விதம் கூருதே! ஐயா அவர்களுக்கு நம்மிடம் அபாரமான ப்ரியமும் மதிப்பும் உண்டாயிருப்பதை அவர் முதலில் பாக்குத்தூளைப் பற்றிப் பேசியபோதே தெரிந்து கொண்டேன். ஐயா அவர்களை அவ்விதம் எண்ணுதே! அவர் ஏதோ பெரிய யோசனையிலிருப்பதாகத் தெரிகிறது. ஆகையினுல் நாம் இப்போது அவரைத் தொந்தரவு செய்யலாகாது. பிறகு கேட்போம். நீ வேண்டுமானுல் உட்காரு, இல்லையேல் உள்ளே செல்லு"! என்ருள்.

தன்னினைவேயில்லாமல் உட்கார்ந்திருந்த மணிவண்ணனுடைய செவியில், கடைசியாகக் கிழவி மைலாவை உள்ளே போகும்படியாகச்

சொன்ன வார்த்தை விழுந்தது. அப்போதுதான் அவன் தான் அங்கிருப்பதை யுணர்ந்து கொண்டான்; சடக்கென்று தனது விழியைமாற்றியபடியே பேசத்தொடங்கி, "என்னவென்று தானியம்புவேன்? அப்போதிருந்து யோசித்து யோசித்துப் பார்க்கிறேன். எனக்கு ஒன்றும் விளங்கவே இல்லை. இவ்விடத்தைப் பார்த்தால் இந்திரபவனமோ, ரதிதேவிசயன அறையோ என்று ஐயுறும்படியாக விருக்கின்றது. அதோடு இங்கே வீணை, பிடில், ஆர்மோனியம், தம்புரா முதலியன இருப்பதைப் பார்த்தால் இது ஸாஸ்வதியின் மஹாலோ என்ற சந்தேகம் உதித்தது. அதோடு அந்தச் சந்தேகத்தைப் போக்கக்கூடிய விதமாகத் தமது குழந்தை வந்ததைக் கண்டதும் சாக்ஷாத்ஸரஸ்வதியே எழுந்து வந்துவிட்டாளோ என்றும் எண்ணினேன். அதற்கேற்ப குழந்தை கூறிய தொனியோ அந்த ஐயத்தை முற்றும் ஒழித்து என்னை மீறிய அபாரமான அன்பை எனக்குள் பெருக்கிவிட்டது. கேவலம் நான் இந்த ஸரஸ்வதியினிடம் எவ்விதம் பேசுவது? என்ன செய்வது என்பதை யறியாது விழிக்கின்றேன். அடாடா! ஒவ்வொரு அம்சத்திலும் ஸரஸ்வதிக்கு ஒப்பாகவே இருக்கின்றாள். அடாடா! என்ன அற்புதம்! என்ன ஆநந்தம்" என்று தனக்குத் தோன்றியவாறெல்லாம் கூறியபடியே அந்த அணங்கை இமைகொட்டாமற் பார்த்துப் பல்லிளித்தான். இவற்றை யெல்லாம் வெகுயூகமாய்க் கேட்டுக்கொண்டிருந்த மைலா புன்முறுவல் பூத்தமுகத்துடன் பேசத்தொடங்கி, "அடாடா! என்ன இது! அபாரமான பிரியம் ஐயா அவர்களுக்கு இவ்விடம் உண்டாய்விட்டது! அதனால் நம்மை ஜகன்மாதாவாகிய ஸரஸ்வதிக்கே ஒப்பாகக் கூறுகின்றார்கள். அம்மா! கேவலமான குரூபியும் ஞானமில்லாதவளுமான என்னை ஸரஸ்வதிக்கு ஒப்பிடுவது எனக்கு மிகவும் வெட்கத்தை யுண்டாக்குகின்றது. அம்மா ! ஐயா அவர்களுக்கு தாகத்திற்கு ஏதேனும் வேண்டுமா, கேட்டாயா" என்று கூறிக் கடைக்கண்ணால் மணிவண்ணனைப் பார்த்தாள்.

ஆகா! அவள் பார்த்தபார்வை, நமது மணிவண்ணனின் மனத்தில் ஊடுருவிச் சென்று துளைத்தது. துளைக்கவே அவன் மயங்கித் தயங்கி மோகம் தலைக்கேறிச் சோகமுற்றான்; தன்னை மீறிய ஆநந்

தத்தினல் தன்னிருகரங்களினலும் தாளம் தட்டிக்கொண்டு காம வெறிகொண்ட பார்வையால் மைலாவைப் பார்த்தபடியே, "மாரு பாரிகி கோர்வஜால" என்ற ஜாவளியை வாய்விட்டுப்பாடிவிட்டான். பாடும்போதே தனது விகாரமான நிலமையைத்தானே உணர்ந்த மணிவண்ணன் திடுக்கிட்டான்; தனக்குள்ளாகவே வெட்கியவனய் அதை மேலுக்குக் காட்டிக்கொள்ளாமல் நகைத்தபடியே பேசத் தொடங்கி, "ஆகா! இவ்விடத்தை அளவு கடந்த இன்ப நிலய மென்றே கூறலாம். அடாடா! இந்த வீணையைப் பார்க்கும்போதே இதில் இந்த செஞ்சுருட்டி ராகத்தைப் பாடினல் வெகு அழகாயி ருக்கு மென்று தோன்றியதை அடக்க வியலாது பாடியும் விட் டேன். இவ்விடத்திய ஸரஸ்வதியின் கானத்திற்கு முன்பு நான் என்னை மறந்து பாடியதை எண்ணி மிகுந்த அவமான மடை கிறேன்" என்று கூறி முடிக்குமுன் அங்கிருந்த கிழவி வியப்புடன் பார்த்தபடியே, "ஆஹாஹா! என்ன அற்புதமான சாரீரம், அடாடா! இத்தகைய அம்ருதத்தை வைத்துக்கொண்டா குழந் தையை அபாரமாகப் புகழ்ந்தீர்கள்? அடடா! என்ன போங்கள்! தாங் கள் சங்கீதத்தில் இத்தகைய நிபுணத்வம் வகித்தவர்களாகத்தான் இருப்பீர்களென்று நான் தங்களை முதலில் பார்க்கும்போதே அறிந் தேன்; அது உண்மையாகவே ஆய்விட்டது. அனேகமாக என் னுடைய யூகம் பலிதமாய் விடுகின்றது. ஐயா! ஏதோ தாங்கள் பூராவாக ஒரு க்ருதியோ, ஆலாபனையோ செய்ய வேண்டும். குழந்தையும் மிக்க ஆசிக்கின்றுள். தமக்கு எந்த ச்ருதி தேவையோ அதை வைத்துக் கொண்டு பாடுங்கள்" என்று கிழவி முடிப்பதற்குள் மைலா மிகுந்த குதூகலத்துடன் "அம்மா! நான் ஐயா அவர்க ளைப் பாடச்சொல்ல நினைத்தேன். தாங்களே சொல்லிவிட்டீர் கள். நான் அவர் குரலைக்கேட்டபோதே சங்கித ஞானி என்று தீர்மானித்து விட்டேன். அப்படியே அவர் பாடியதும் அமிருதம் போலவே இருக்கின்றதே! ஆஹா! அருமையான கானம்! ஐயா! தங்களுடைய பாடலை முழுதும் கேட்டால்தான் எனது குறைதீரும். ஏதோ ஆரம்பியுங்கள்" என்று கூறியபடியே அருகிலிருந்த ஹார் மோனியத்தையும் தம்பூராவையும் எடுத்துக் கூடத்து மத்தியில் விரித்திருக்கும் ரத்தினக் கம்பளத்தின் மேல் வைத்துவிட்டுச் சரே லென்று தானும் கம்பளத்தின் ஒரு பாகத்தில் உட்கார்ந்துவிட்டாள்.

இவர்கள் இருவரும் இப்படிப் பேசியதைக் கேட்ட மணி வண்ணன் வியப்புற்ருன்; மைலா கருவிகளைத் தயார் செய்து தாராளமாக உட்கார்ந்ததைக் கண்டதும் மனமடங்காத உற்சாக மடைந்துவிட்டான். உடனே பாடுவதா, வேண்டாமா என்று சற்று யோசிக்கத் தொடங்கினன்; பாடாவிட்டால் அந்த மின்னளின் மனம் மாறி நோகுமென்றும், அதோடு மீண்டும் தரிசனம் கிடைக்குமோ, கிடைக்காதோ என்றும், தான் பாடுவது நன்ரு யிருப்பினும் இல்லாவிடினும் பாடி விட்டால் அவளுடைய ப்ரீதிக்குப் பாத்திரமாவதுடன் அவளது தரிசனம் கிடைத்துக் கொண்டே இருக்கும் என்றும் எண்ணிப் பெரு நகை புரிந்தபடியே பேசத் தொடங்கி, "பாட்டீ! கானமயிலாடக் கண்டிருந்த வான்கோழி தானு மதுவாகப் பாவித்தது போல நானும் தங்கள் குழந்தையைப் போலெண்ணி அவ் வணங்கின் முன்னல் பாடுவதா? மிகுந்த லஜ்ஜை யாக இருக்கிறது. இருப்பினும் தங்கள் வார்த்தையைத் தட்ட மனம் வரவில்லை. ஆகையினல் ஏதோ தெரிந்தவற்றைப் பாடுகிறேன்" என்று கூறிக்கொண்டே இறங்கிக் கம்பளத்தி லுட்கார்ந்து ஹார்மோனியம் ச்ருதி வைத்துக்கொண்டு பாடத் தொடங்கினன். அப்பொழுது மாலை நேரமாதலால் அந்த வேளைக்குத் தகுந்த ராகமாகிய வாசஸ்பதி ராகத்தை ஆலாபனம் செய்து "என்னடு நீ க்ருப கல்குனே" என்னும் கீர்த்தனத்தை அதி ஆனந்தமாகப் பாடிப் பல்லவி சுரம் போட்டு நிறுத்தி, உடனே பைரவி ராகத்தை ஆலாபனம் செய்யத் துவக்கினன்.

உண்மையில் மணிவண்ணன் சங்கீதம் பாடுவதில் தேர்ச்சி பெற்றவனுகையினல் அவன் அவ்விடத்தில் தனது திறமை பூராவும் காட்டிப் பாடுகிருன். இவனது பரமானந்தமான கானத்தில் உண்மையாகவே மைலாவும் கிழவியும் ஈடுபட்டுத் தம்மை மறந்து "ஆஹா ஹா!" என்று ஆரவாரித்துத் தலையசைத்து ஆநந்த சாகரத் தில் மிதக்கின்ருர்கள். மைலா தனக்குள் "ஆஹா! இத்தகைய கானத்திற்குப் பக்க ஜதை யிருந்தால் வெகு அழகாக இருக்குமே!" என்று எண்ணியபடியே கிழவியை நோக்கி, "அம்மா! நீ உடனே நமது ஆளையனுப்பி நமது ஜதைக்காரர்களை அழைத்து வரும்படி சொல்லு" என்ருள்.

இந்த வார்த்தையைக் கேட்ட மணிவண்ணன் "ஏதேது! இங்கு பிறர் வந்துவிட்டால் நம்மை அவர்கள் கண்டு கொள்வதோடு நமதெண்ணம் நிறைவேருமல் திரும்பிவிட நேரிடக் கூடும்?" என்று யோசித்த வண்ணம் பாடலை நிறுத்திவிட்டு "அம்மா! அதெல்லாம் வேண்டாம். ஏதோ நான் மனம்போனவாறு சாதாரணமாகப் பாடுவதற்குப் பக்கமேளம் எதற்கு? மேலும் நான் பக்க மேளத்துடன் ஒரு நாளும் பாடியறியேன். அவையெல்லாம் என் பாடலுக்குத் தகா. நான் ஏதோ தங்கள் வார்த்தையைத் தட்டலாகாதெனப் பாடினேன். அது எனக்கு மிகவும் வெட்கமாக இருக்கிறது. தங்களுடைய அபாரமான கானத்திற்கு முன் நான் ஹீனமாகப் பாடியதைத் தாங்கள் ஆமோதித்ததே போதும். அதற்கு மேல் அதிகம் வேண்டாம்" என்று அவனுடைய பொங்கி வழியும் மோகத்தில் தான் பேசுவது என்னவென்பதையும் மறந்து பல்லை யிளித்தபடியே, இமைகொட்டாது மைலாவைப்பார்த்துக்கொண்டே மொழிந்தான்.

இது கேட்ட இருவரும் அதற்கு மேல் வற்புறுத்தாது அவனை மீண்டும் பாடும்படி கேட்டுக்கொண்டார்கள். மணிவண்ணன் பின்னும் ஒரு மணி நேரம் பைரவி ராக ஆலாபனை செய்து ராக மாலிகை யொன்று பாடி நிறுத்தி மைலாவைப் பாடும்படியாகக் கேட்டுக்கொண்டான். மைலாவும் உண்மையில் இனிமையாகப் பாடும் பெண்மணி யாகையினுல் அவனது வார்த்தையைத் தட்டாது பாடத் தொடங்கிக் கமாஸ் ராகத்தை வெகு தமாஷாகப் பாடி "மருலு கோன்னுதிரா மானினி மணி நீபை" என்ற ஜாவளி யைத் தனது முழுத் திறமும் காட்டி வெகு உருக்கமாயும் கடைக் கண்ணுல் மணிவண்ணனைப் பார்த்தபடியும் பாடினுள். அப்படிப் பாடுவதைக்கேட்ட நமது இளவலுடைய சப்த நாடியும் துடித்தன. அந்தப் பாடலின் அர்த்தத்தை உண்மையிலேயே இவன் அனுபவித்துத் தவிக்கின்ருன். ஆஹா ஹா என்று தலை யசைத்துத் தாளம் போட்டுப் பரவசமாகிருன். அத்தருணம் மைலா அப்பாடலை முடித்துவிட்டு மற்ருெரு ஜாவளி பாடத்தொடங்கி, அதையும் முடித்தாள். இதற்குள் கிழவி பேசத் தொடங்கி, "ஐயா

அவர்களின் பாடலைவிடக் குழந்தையின்கானம் சிறந்ததாக எனக்குத் தோன்றவில்லை. ஏதோ குழந்தையின் ஜீவன சம்ரக்ஷணார்த்தம் கற்றுக்கொண்ட பாடல் இது. குழந்தை ஏதோ சுமாராகக் கச்சேரியும், ஹரிகதையும் செய்யும். அதற்கு வேண்டிய பாடல்களைப் பாடம் செய்வதற்கும் குழந்தையின் தேகத்தில் பலமில்லை. ஏதோ வயிற்றுப் பிழைப்பிற்காக ஏற்பட்ட பாட்டுகள் இவை. ஐயா அவர்களின் மேன்மையான குணத்திற்கும் அருமையான கானத்திற்கும் ஈடுண்டோ உலகில்? எங்கள் மீதுள்ள அன்பினுலேயே இந்தப் பாடலைப் பொறுமையுடன் கேட்டு மகிழ்ந்ததாக அறிந்து நாங்களும் மகிழ்கிறோம்.

மணிவண்ணன்:—ஓகோ! குழந்தைக்குக் கதை செய்வதில் தேர்ச்சியுண்டோ! பேஷ். அபார வல்லமையுண்டென்பதை நான் அப்போதே தெரிந்து கொண்டேன். அதுபோலவே இவ்விடத்திலுமிருக்கிறது. என்னென்ன கால க்ஷேபம் செய்யப் பழக்கமுண்டு?

கிழவி.—அதிகமாக ஒன்றும் பழக்கமில்லை. சீதாகல்யாணம், ருக்மிணி கல்யாணம், பாதுகா பட்டாபிஷேகம், நந்தனர் சரித்திரம், குசேலர் சரித்திரம் முதலியவைதான் தெரியும். இப்போது ராமதாஸ் பழகி வருகிறுள்'' என்று பேசிக்கொண்டிருக்கையில் மணி 10 டாங், டாங், டாங், என்று அடித்தது. இது கேட்ட மணிவண்ணன் திடுக்கிட்டு "ஹா! மணி பத்தடித்துவிட்டதா! ஐயோ! மஞ்சுளா என்ன நினைக்கின்ருளோ!'' என்று அப்போதே எண்ணினுன். இவ்விடத்தைவிட்டு அகலவும் மனம் வரவில்லை. அங்கு என்ன நடக்குமோ என்பதை நினைக்க மனத்தில் கலக்க முண்டாகிறது. இன்னிலைமையில் அவன் தான் என்னசெய்வதென்றும், தனது மனோரதம் பூர்த்தியாகுமா என்று முற்றும் அறிந்துகொள்ளாது எவ்விதம் எழுந்து செல்வதென்றும் நமது எண்ணத்தை இவ்விடத்தில் எவ்விதம் உரைப்பதென்றும் யோசனை செய்யலானுன்.

பத்து மணியடித்ததைக் கண்ட கிழவி "அடாடா! மணி பத்து அடித்துவிட்டதா! இங்கு நடந்த பிரம்மாநந்தமான சங்கீதத்தின் சுவையினல் மணியானது கூடத் தெரியவில்லையே! அடாடா!

ஐயா அவர்களுக்குத் தாக சாந்திக்கும் ஒன்றும் கொடுக்கவில்லையே! போஜனம் செய்யும் நேரமும் கடந்து விட்டதே! பசியைப் பாராட்டாது உட்கார்ந்திருப்பதி லிருந்தே ஐயா அவர்களின் உயரிய குணமும், நம்மிடத்து ப்ரீதி அளவுகடந்திருக்கிறதென்பதும் தெரியவில்லையா! அம்மா, மைலா! நான் சென்று சிறிது பாலும் பலகாரமும் கொண்டுவருகிறேன்'' என்று கூறிக்கொண்டே தந்திரமாய் அவ்விடத்தைவிட்டு நழுவிவிட்டாள்.

ஆகா! தனியாக விடப்பட்ட மணிவண்ணன் மனமானது நிலை மாறிப் பறக்கின்றது. அவ்விடத்தில் மிக்க ஒய்யாரமாயும் அபாரமான எழிலுடனும் உட்கார்ந்திருக்கும் மைலாவை ஆவலுடன் தழுவிக்கொள்ள அவனது கைகள் முந்துகின்றன. இந்நிலையில் அவன் தனது ஆசனத்தை விட்டு எழுந்து அங்கு மிங்கும் உலாவிய படியே நகைத்துக்கொண்டு மைலாவைப் பார்த்து ''அம்மணீ! மணி பத்து அடித்து விட்டதே! தாங்கள் போஜனம் செய்ய வேண்டாமா! பட்டினி கிடக்கிறீர்களே!'' என்றான்.

மைலா:— அம்மாகொண்டுவருவதை இருவரும் புசித்தால் பசியாறுதா! தங்களைவிடுத்து நான் தனியாகப் புசிப்பதென்றால் மனம் வருமா? முதலில் அதிதி ஆராதனம் செய்வதே எங்களுக்குப் பெரும் பாக்யம். அதிலும் சங்கீதக் களஞ்சியமாகிய தாங்கள் பட்டினியாகத் தவிக்கும்போது நான் புசிப்பது தகுமா?'' என்றுகூறிமணிவண்ணனை ஒருவிதமாக நோக்கினாள். அவளுடைய வார்த்தையும், பார்வையும் மணிவண்ணனை அடியோடு தடுமாறச் செய்துவிட்டன. அவனால் அதற்குமேல் சகிக்க இயலவில்லை. விகாரமான வேதனையினால் அவஸ்தைப்பட்டான். தன்னை மீறிய மையலுடன் மைலாவை நோக்கியபடியே, ''ஆகாகா! என்ன குணம்! என்னமனது! உங்களுடைய ரூபலாவண்யமும், குணத்தின் ஒழுங்குங்கூடி என்னை இனிமேல் க்ஷணமும் தங்களது கரத்தைப் பற்றுதிருக்க விடாது வதை செய்கின்றன. தங்களுடைய சசிபோன்ற வதனத்தைக் கண்டதும் எனக்குப்பசி விலகி யோடிவிட்டது. ஐம்புலனுக்கும் தாங்கள் தேவாமிருதம்போன்ற அரிய விருந்துசெய்து கொண்டி

ருக்கையில் பசி என்பது எப்படியுண்டாகும்? தங்களது பாடலின் திறமையைக் கேட்டபோதே தமக்கு இந்த அற்பப்பரிசுகொடுக்க எண்ணினேன். அப்போது உங்கள் தாயாரிருந்தபடியினால் தடுத்து விடுவார்களோ என்று ஐயப்பட்டு வாளாவிருந்தேன். இப்போது எனது ஆவலைப் பூர்த்திசெய்து என்னை மகிழ்விக்கவேண்டும்" என்று கூறியபடியே தன் சட்டைப் பையிலிருந்து 50ரூபாய் நோட்டை எடுத்து மைலாவின் கரத்தைத்தீண்ட இதுவே தக்க சமயமென்றெண்ணி அவள் கரத்தைப்பிடித்து நோட்டைவைத்து மற்றொரு கரத்தை எடுத்துத் தனது ஆவல்தீர முத்தமிட்டு அவளுடைய பக்கலிலேயே உட்கார்ந்து அவளுடைய சம்மதத்தை நோக்காமலே தனது இருகரங்களினாலும்] அவளை யணைத்துக்கொண்டு "ஆகா! என் இன்ப வடிவமே! ஆநந்த நிலயமே! மூன்றுநாளாய் என் உயிர் தவித்து உருகியது. இதை ஈசனேயறிவார். எனது பங்கில் கடவுள் இன்றே நின்று கிருபைசெய்தார்" என்று கூறியவாறு மகிழ்ந்தான்.

மணிவண்ணனின் நிலைமையையும் மனப்போக்கையும் நன்றாக அறிந்த மைலா அவன் செய்கையினால் சிறிதும் திடுக்கிடாது திடமாகவே உட்கார்ந்திருந்தாள். எனினும் அவள், தனது ஜாதிநடிப்பை விடாது நடிக்கத்தொடங்கி "ஆகா! என்ன இது! தாங்கள் இவ்விதம்தான் செய்வதா! நான் தங்களையும் தங்கள் சங்கீதத்தையும் கண்டவுடன் தங்கள் பால் எத்தகைய மதிப்பும் எவ்விதமான மரியாதையும் வைத்துள்ளேன் என்பதைத் தாங்களறியவில்லை. தங்களுடைய சங்கீதத்திற்கு நானல்லவா பரிசளிக்க வேண்டும்? நான் தங்களுக்கு இனமாக என்னையே அளித்து விடவல்லவா தீர்மானித்துவிட்டேன். அதோடு எனக்கு இதுகாறும் கதைக்குப் பின்பாட்டுப் பாடுபவர் சரியானபடி எனதிஷ்டம்போல் இருக்கவில்லை. தீராத தொல்லையால் அவரைவிடாது வைத்திருக்கிறோம். தங்களுடைய சங்கீதமே எனது கதைக்கு மிகவும் நன்றாக அமைந்தது என்பதை முதலிலேயே தீர்மானித்துவிட்டு நாம் சதிபதிகளாகவே கதையும் செய்வோம் என்ற முடிவுக்கும் வந்துவிட்டேன். அதைத் தம்மிடம் எவ்வாறு தெரிவிப்பது என்று நான் யோசித்துக் கொண்டிருக்கும் தறுவாயில் தாம் இவ்விதமாகவா பரிசளிப்பது! வேண்டாம்,

தாங்களிதைத் திருப்பி வாங்கிக் கொள்ளுங்கள்'' என்று வெகு தந்திரமாயும் சாமர்த்தியமாயும் அவனுடைய மோகத்தை இன்னும் தூண்டக்கூடிய விதமாயும் கூறி மணிவண்ணன் கையைப்பிடித்து நோட்டை வைக்க முயன்றாள்.

கடும்பசியால் வருந்துகிறவனுக்கு மாதுரியமான உண்டிகிடைத்ததுபோல் மணிவண்ணனின் மனவேதனைக்குத்தக்க அவுடதம் போலிருந்த மைலாவின் வார்த்தையைக்கேட்டதும் அவன் கட்டுமீறிய களிப்பும் அபாரமான மனவெழுச்சியுங் கொண்டான்; தாங்கவியலாத ஆநந்த சித்தனுகி மெய்மறந்து மைலாவின் இருகாங்களையும் பிடித்துக்கொண்டு "என்கண்மணி! உன்னுடைய அம்ருதமான வார்த்தையைக் கேட்பதற்கே நான் கோடிகோடியாகப் பாத காணிக்கை சமர்பித்தாலும் போதாதே! என்னுடைய இந்த அற்பத் தொகையை நீ மறுக்கக்கூடாது. உனதிஷ்டம்போலவே நான் உட்படத் தயாராகவிருக்கிறேன். என்னுடைய நிலைமையைக் கண்டு உனது சித்தத்தை ஈசனே இவ்வளவு சடுதியில் திருப்பியதை எண்ணி மிகவும் கொண்டாடுகிறேன்.'' என்று கூறி நோட்டை அவள் கையிலேயே கொடுத்து அவளை யணைத்துக்கொண்டான்.

அத்தருணம் வெளியில் கிழவி வரும் சத்தம் கேட்டது. மணிவண்ணன் தூர விலகிக் கொண்டான். கிழவி பாலும் பலகாரமும் கொண்டுவந்து மேஜைமேல்வைத்து "அம்மா! மைலா! இந்தப் பலகாரத்தை ஐயா அவர்களுக்குக்கொடு. நான் சென்று போஜனம் செய்துவிட்டு வருகின்றேன்'' என்று கூறியபடியே அவ்விடத்தைவிட்டுப் போய்விட்டாள்.

உடனே மைலா அந்தப் பலகாரங்களையெல்லாம் எடுத்து மணிவண்ணனுக்குக் கொடுத்து உண்பித்துத் தானுமுண்டு பாலையும் பருகச் செய்தாள். பின் இருவரும் தாம்பூலம் தரித்துக்கொண்டார்கள். இதற்குள் மணி 11 அடித்துவிட்டது.

நமது அருங்குண பூஷணியாகிய மஞ்சுளவல்லிக்கோ இரவு மணி பத்து அடித்ததுமுதல் மனக் கொதிப்பும், துடிப்பும், திகிலும்

அதிகரித்துக்கொண்டே வருகின்றன. அவள் இன்னதென்று ஓர் முடிவானஎண்ணத்தை எண்ணமாட்டாமல் தவிக்கின்ருள். "ஐயோ! எக்காரணம்பற்றி இன்னும் நமது இன்பதுரைவராதிருக்கின்ருரோ, தெரியவில்லையே! என்ன செய்வேன். வேறு திக்கில்லாத நான் இந்த இராக்காலத்தில் ஒண்டியாக எப்படி எங்கேபோய்த் தேடுவேன்! ஐயோ! என் மனம் என்னென்னவோ எண்ணி ஏங்குகின்றதே! நேற்று முதல் அவருடைய சித்தம் பேதித்துவிட்டதையறிந்த என் மனம் பலவிதமாகக் குழம்புகின்றதே! என்னவிதமாக நான் என் மனத்திற்குச் சமாதான முண்டாக்குவேன்? ஒருகால் அவர் மனத்தில் குடிகொண்டிருக்கும் பெண்ணின் வீட்டிற்குச் சென்றிருப்பாரோ! அல்லது வழியில் ஏதேனும் வண்டிகளினல் அபாயம் நேர்ந்திருக்குமோ? அல்லது ஆபீஸில் வேலையின் தொந்தரையதிகமாகவிருக்குமோ! எங்கேனும் சிநேகிதர் வீட்டிற்குச் சென்றிருப்பாரோ ஒன்றுந் தெரியவில்லையே! மணி 11 அடித்துவிட்டதே! இந்த அகாலத்தில் நான் எங்குச்சென்று விசாரிப்பேன்? ஐயோ! அடுத்த தெருவில் அவருடைய ஆபீஸிலிருக்கும் மனிதர் இருக்கின்ருரே, அவரிடம் சென்று விசாரித்தால் தெரியவருமே! நான் யாரை யனுப்பி விசாரிப்பேன்? நானே செல்வதென்ருலும் இந்த அகாலத்தில் ஒண்டியாக அடுத்த தெருவிற்கு எவ்விதம் செல்வேன்? தினம் வரும் வேலைக்காரியும் இன்று வரவில்லையே! ஹா! ஜகதீசா! இதென்ன சோதனையா! என் பர்த்தா எத்தகைய இடியிடித்த போதிலும் தப்பாமல் ஆறுமணிக்கு வந்துவிடுவாரே! அத்தகைய மனிதர் மணி பதினென்ருயும் இன்னும் வாராமைக்குக் காரணம் தெரியவில்லையே! என்ன செய்வேன்?" என்று புலம்பித் தவித்துத் துடிக்கின்ருள். அவளது உயிர் நிலைகொள்ளாது பறக்கின்றது. அடிக்கடி வீதியிலிருந்து உள்ளே வருவதும் சுவாமியை வேண்டிக்கொள்வதும் மீண்டும் வீதியை அடைந்து பார்ப்பதுமாகத் தவிக்கின்ருள். மணி 11க்கு மேலுமாய் விட்டது. அதற்குமேல் அவளால் துக்கம் தாங்கமுடியவில்லை. வீட்டுக்கதவைப் பூட்டிக்கொண்டு துணிவுடன் அடுத்த வீதிக்குச்சென்று விசாரித்து வருவதற்கே அவள்மனம் அவளைத் தூண்டுகின்றது. அவள் "அந்தோ! அகாலத்தில்சென்று அங்கு நித்திரை செய்வோரை எவ்விதம் எழுப்

புவது ? நித்திரையினின்றும் கலைத்தால் அவர்கள் என்ன நினைப்பார்களோ! உம். யார் என்ன நினைத்தபோதிலும் நாம் சென்று விசாரித்துத்தான் தீரவேண்டும்'' என்று தீர்மானித்துக்கொண்டு சரேலென எழுந்து, கடவுளின் படத்தருகே சென்று, அநேகவிதமான ஸ்தோத்திரஞ்செய்து வணங்கிவிட்டு, ஒரு பூட்டை எடுத்து வீதிக்கதவைப் பூட்டிக்கொண்டு, தன் கையில் தயாராகவைத்திருந்த சால்வையைத் தலைமுதல் நன்ருக மூடி முக்காடிட்டுக்கொண்டு விற்ற் என்று வேகமாகவும், தலை குனிந்தபடி திரும்பிப் பார்க்காமலும் நடக்கத்தொடங்கினுள். எனினும் அவள் மனத்தில் கப்பிக்கொண்டிருக்கும் அபாரமான திகிலும் குழப்பமும் மேலும் மேலும் பெருகிக்கொண்டே வருகின்றன. நிச்சப்தமான நிசிவேளையில் தன்னந்தனியே செல்கிற பயம் அவளை நடுக்கமுறச் செய்கிறது. இவ்வித நிலைமையில் அவள் தள்ளாடியவாறு சென்று கொண்டே இருக்கிருள். இவளுக்குப் பின்னல் சிறிது தூரத்தில் ஓர் உருவம் இவளை யறியாதபடி மறைந்து மறைந்து பார்த்தபடியே வருகிறது.

நமது மஞ்சுளா 'அவ்விடத்தில் என்ன செய்தி கிடைக்குமோ, என்ன சொல்வார்களோ!' என்ற கலவரத்துடன் தான் குறித்துச் சென்ற வீட்டை அடைந்தாள். அவ்வீட்டின் வீதிக்கதவு தாளிடப்பட்டிருந்தது. கதவை எவ்விதமிடிப்பதென்று யோசித்து அவள் சிறிது தயங்கினுள்; மீண்டும் தன்னைத் தேற்றிக்கொண்டு "அம்மா! அம்மா!" என்று கூவியபடியே கதவை இடித்தாள். அப்போது மணி 12 அடித்த சத்தமும் இவள் காதில் பட்டது. கதவைத் தடதடவென்று இடித்த உடனே உள்ளிருந்து ஒருகுரல் "யார்?" என்று கேட்டது. உடனே மஞ்சுளா "அம்மா! நான்தான் மஞ்சுளவல்லி; கதவைத் திறவுங்கள்" என்ருள். பின்னர் உடனே கதவு திறக்கப்பட்டதும் கையில் விளக்குடன் ஒரு கிழவி எதிரில் தோன்றி, "அம்மா! யாரம்மா நீ! எங்கே வந்தாய்! யாரைத்தேடுகிருய்?" என்று கேட்டாள்.

மஞ்சுளா:—(மிகுந்த வணக்கத்துடனும் மரியாதையாயும்) இவ்வீட்டிலிருப்பவர் ஒருவர் கோட்டையில் வேலையிலிருக்கிருர் அல்

லவா? அவருடைய ஸம்ஸாரத்தைப் பார்க்க வந்தேன். அவர்களெங்கே கூப்பிடுங்கள்.

கிழவி:—அம்மா! அந்தம்மாள் ஊரிலில்லே; ப்ரஸவிக்கப் போயிருக்கிருள். அவள் நாயகன் மட்டும் மெத்தையில் படுத்து நித்திரை செய்கிருர். எனக்கு மெத்தை ஏறுவது முடியாது. இங்கு வேறு யாரையும் காணவில்லே. நீயே வேண்டுமானுல் அதோ படி போகிறது; அந்த வழியாகச் சென்று எழுப்பிப் பேசிக்கொள்—என்று வழியைக் காட்டினுள்.

இதைக் கேட்டதும் மஞ்சுளா "ஐயோ, பாவமே! நமது விஜனயோ இது! தனியே நான் சென்று எவ்விதம் ஓர் ஆடவனை எழுப்புவேன்?" என்று தயங்கியபடியே கிழவியை நோக்கி "பாட்டி! நிரம்பவும் அவசரமான காரியம். உங்களுக்கு மிகுந்த புண்ணியமுண்டு. தாங்கள் இங்கிருந்தே அவரைச் சற்று எழுப்பலாகாதா! அவர் பெயரை விளித்துக் கூவினுல் வரமாட்டாரா! நான் தனிமையில் எவ்விதம் சென்று அழைப்பேன்?என்பால்தயவு கொண்டு சற்று எழுப்புங்கள்" என்று மன்றுடிக் கேட்டாள்.

கிழவி:—ஏனம்மா! நீ சொல்வதைப் பார்த்தால் ஏதோ அவசரமான வேலே என்றுதான் தோன்றுகின்றது. இந்த அர்த்த நிசியில் கூடயாரும் துணையின்றிச் சிறிய இளம்பிராய வனிதை யாகிய நீ தெருவில் பயமின்றி வந்த காரணம் யாது? அத்தகைய ஆபத்தான செய்தி என்ன ?" என்று கேட்டாள்.

இது, நமது மின்னுளின் மார்பில் ஈட்டி பாய்ந்தது போலிருந்தது. "ஐயோ! என்மீது எங்கே விகற்பமாக எண்ணி விடப்போகிருளோ?" என்று பயந்தபடியே அவள் கிழவியை வணங்கி "பாட்டி! நான் தனிமையில் வந்தது வியப்பினும் வியப்பே! அத்தகைய அவசரமான காரியமிருப்பதனுல்தான் வந்தேன். என்னுடைய வீடு அடுத்த தெருவிலுள்ளது.என் ப்ராணபதியுடன்கூட ஆபீஸில் வேலேயாகவிருக்கும் மனிதர் இவ்வீட்டிலிருப்பதாக என் பர்த்தா ஒரு சமயம் சொல்லியிருக்கிருர். எனது பர்த்தா தினம் ஆறு மணிக்கெல்

லாம் ஆபீஸிலிருந்து வந்து விடுவார். ஆனுல் இன்று மணி 12 ஆகியும் அவர் வரவில்லை. ஒருநாளுமிப்படி இருந்த வழக்கமில்லை. அதனுல் எனக்கு மிகவும் பயமாகவிருக்கிறது. என் மனக்கிலேசத்தினுல் நிசி வேளையின் பயமும் எனக்குத் தோன்றவில்லை. இவரை விசாரித்தால் ஏதேனும் செய்திதெரியுமோ என்று விசாரித்துக் கொண்டு போகவந்தேன். அவரைச் சற்று எழுப்புங்கள்'' என்று கண்ணீர் உதிர்த்தபடியே கேட்டாள்.

இவள் கூறிய பரிதாபகரமான செய்தியைக் கேட்ட கிழவி மிகவும் கலங்கியவளாய், "அம்மா! உனது செய்கை மிகவும் மெச்சத்தக்கதாயிருக்கிறது. எனினும் இந்த அகாலத்தில் சிறிய இளம் பாவையாகிய நீ தன்னந்தனியே துணிகரமாக வந்தது சற்றுப் பிசகுதான். ஏனெனில் யாரேனும் துஷ்டர்கள் கண்டு வழிமறித்து உபத்திரவித்தால் என்ன செய்வது. யாரையேனும் துணைக்கழைத்துக்கொண்டு வராது இவ்விதம் வரத் துணிந்ததானது உன்னுடைய பதி பக்தியைச் சிறப்பித்துக் காட்டுகிறது. அந்தப் பக்தியே உனக்கு யாதொரு இடருமின்றிக் காத்ததெனவே கூறலாம். அம்மா! உன் புருஷனிடம் ஏதாகிலும் துர்நடத்தை யுண்டோ?'' என்ருள்.

மஞ்சுளா:—ஐயோ! இது பரியந்தம் அவ்விதமான செய்கை சிறிதுமில்லை. அவர் மிதித்த மண்ணை மிதித்தவர்களும் பரிசுத்தராவர். பாட்டீ! நேரமாய்விட்டது; சற்று எழுப்புங்கள். நான் இக்காலத்தில் வருவதைப்பிசகென்று அறியாதவளன்று. அறிந்திருந்தும் என் மனம் நிலைக்கவில்லை யாகையினுல் வந்தேன். கடவுளே காக்க வேண்டும். என் பதியின் நிலைமையறிந்தால் போதும்'' என்று பதறப் பதறக் கேட்டாள். இதற்குள் கிழவி கூடத்துப் பக்கமாய் மெத்தையில் பொருத்தப் பட்டிருந்த ஜன்னலண்டை சென்று "ஐயா! முதலியாரே! முதலியாரே!'' என்று கூவினுள்.

அந்த முதலியாரும் தற்செயலாய்க் கண் விழித்துக் குழாவருகில் செல்வதற்கு எழுந்திருந்தமையால் கிழவியின் குரல் கேட்டது. உடனே அவர் இறங்கிக் கீழே வந்து செய்தி என்னவென்று கேட்கக் கிழவி நடந்த வாலாற்றைத் தெரிவித்தாள்.

இது கேட்ட முதலியார் திடுக்கிட்டுப்போய் மஞ்சுளவல்லியைப் பார்த்தபடியே "ஏனம்மா! அவர் இன்றுமாலை நாலு மணிக்கு முன்னமேயே வீட்டிற்குப் போய்விட்டாரே! அவருக்கு நேற்று முதல் ஏதோ தேக அசௌக்யமாம். ஆபீசில் உட்கார்ந்து வேலை செய்வதற்கு முடியாமல் தவித்துக்கொண்டிருந்தார். நான்தான் பார்த்து வீட்டுக்குப் போகும்படியாயும் தெரிவித்தேன். அவர் உடனே போய்விட்டாரே! இன்னுமா வீடு வந்து சேரவில்லை? அங்கு அருகில் யாரேனும் உறவினர் இருக்கின்றார்களோ? ஒருகால் வீடு செல்ல மாட்டாமல் அங்குத் தங்கியிருப்பாரோ?" என்றார்.

தான் சற்றும் எதிர்பாராதபடி இவ்விதமான பதிலைக்கேட்ட மஞ்சுளா திடுக்கிட்டு, நிலைதடுமாறி, முன்னிலும் அதிகரித்த திகிலையடைந்து இடிந்துபோய், "ஹா! மாலை நாலுமணிக்கு வீட்டுக்குப் புறப்பட்டு விட்டாரோ! ஐயோ! இன்னும் வீடுவந்து சேரவில்லையே! எங்களுக்கு அங்கு உறவினரும் யாருமில்லையே! எல்லோரும் வெளியூரிலல்லவா இருக்கின்றார்கள். ஐயோ! அவருக்கு என்ன உடம்பு! என்னிடம் கூறவில்லையே! தங்களிடம் தெரிவித்தாரா!" என்று அதிக விசனத்தோடு கேட்டாள்.

இது கேட்ட அந்த மனிதன், மிகவும் பரிதாபத்துடன் "அவர் தமக்கு மிகுந்த தலைவலி, ஜுரமென்று கூறினார். அவருடைய நிலைமை மிகவும் கேவலமாக இருந்தமையினால்தான் நானே வீடு செல்லும்படியாகக்கூறினேன். அவரும் உடனே சென்றுவிட்டார். ஒருகால் எங்காகிலும் சிநேகிதர்களின் வீடு சென்றிருப்பார். அல்லது ஆஸ்பத்ரி முதலிய இடங்களுக்குச் சென்றிருப்பாரோ என்னவோ! அம்மணீ! கவலை கொள்ளவேண்டாம். உதயமாயதும் நானே சென்று விசாரித்து வருகிறேன். தாங்கள் கண் கலங்காதீர்கள்" என்று தேற்றினான்.

அதற்குமேல் மஞ்சுளாவுக்கு அங்கு நிற்கப் பிடிக்கவில்லை. மனது தத்தளிக்கின்றது. "ஐயோ! என்ன செய்வேன்? என் ப்ராண பதிக்குத் தேக அசௌக்ய மென்பதைக் கேட்க என் மனமானது துடிக்கின்றதே! அவர் எங்குச் சென்றிருப்பாரோ தெரியவில்லையே!

ஆகா! நேற்று முதல் அவர் மனம் ஒருவிதமான கலவர மடைந் திருப்பதாகத் தெரிகின்றதே; அந்தக் கலக்கத்தில் எங்காகிலும் சென்றிருப்பாரோ!'' என்று பலவிதமாகக் குழம்பியபடியே தன் வீடு செல்லச் சித்தமாய்க் கிழவியைநோக்கி, ''பாட்டீ! தயவு செய்து எனக்குத் துணை வரமுடியுமா! ஒண்டியாக வீடு செல்ல அச்சமாக இருக்கின்றது.'' என்றாள்.

கிழவி:—அம்மா! நீ இப்போது வீடு சென்று என்னசெய்வாய்? இங்கேயே படுத்துக்கொள். காலையில் எழுந்துபோய் விடலாமே.

மஞ்சுளா:—பாட்டி! இல்லை! இல்லை! இப்போதே நான் வீடு போய்த்தீரவேண்டும். ஒருகால் என் ப்ராணநாதர் வந்திருந்தாலு மிருக்கலாம். அல்லது இனிமேல் வந்தாலும் வரலாம். சற்றுத் தயவு செய்து வாருங்கள்—என்றாள்.

பிறகு கிழவி வருவதற்கிணங்கி முதலியாரைக் கதவை தாளிட் டுக் கொள்ளும்படியாகக் கூறிவிட்டுப் புறப்பட்டு மஞ்சுளாவுடன் கூடச்சென்றாள். பின்னர் இருவரும் வீட்டை யடைந்ததும் கிழவி மஞ்சுளாவிடம் சொல்லிக்கொண்டு வீடு திரும்பிவிட்டாள்.

மஞ்சுளாவுக்கோ இன்னதென்று விவரிக்க இயலாத வேதனை உண்டாய்த் தீயாய் எரிக்கின்றது. வீதிக்கும் உள்ளுக்கும் நடந்து நடந்து கால்வலி எடுத்துக்கொண்டுவிட்டதே யன்றி ஒரு பலனையுங் காணேம். இவ்விதம் அவஸ்தைப் பட்டுக்கொண் டிருக்கும் நிலைமையில் வீதிக் கதவை யாரோ தட்டும் சத்தங் கேட்டது. உடனே எழுந்து ஓடிக் கதவைத் திறந்து பார்த்தாள். தனது நாயகனுகவே இருக்கக் கண்டு பூரித்துப் புளாகாங்கித மடைந்து, சரேலென்று அவனை வணங்கி எழுந்து, கட்டித் தழுவி, மரத்தை அண்டிய கொடி போல் நின்று ''என் இன்ப துரையே! தங்களை யண்டிய அடியாளை மறந்து இத்தனை நேரம் எங்குச் சென்றிருந்தீர் கள்? மணி ஒன்று அடிக்கும் தருணமாய் விட்டதே! அந்தோ! நான் பட்ட துன்பத்தைத் தாமறிவீர்களா! அறிந்திருந்தால் என்னை இவ்விதம் விட்டு மறந்து இல்லம் வாராதிருப்பீர்களா?'' என்று

கூறியபடியே சென்று கூடத்தில் போடப் பட்டிருந்த சோபாவை யடைந்து தன் நாயகனுடன் உட்கார்ந்தாள்.

நமது மணிவண்ணன் பலகாரமுண்டு தாம்பூலந் தரித்துக் கொண்டு அந்த சுந்தராங்கியினது ஸல்லாப சம்பாஷணையிலேயே கவனமாய் மஞ்சுளாவையும் வீட்டையும் அறவே மறந்து இன்பத்தில் மூழ்கிவிட்டான். மணி 12 அடிக்குந் தருவாயானதும் அவன் விழித்துக்கொண்டவனாய் "ஆகா! என்ன இது! இன்றே நாம் இவ்விதம் வீட்டை மறந்து விட்டால், நம்மை என்னவென நினைப்பாள் நமது மஞ்சுளா! ஆகா! இந்த இன்பத்தினின்றும் பெயரவும் மனம் வரவில்லை, வீடு செல்லாதிருக்கவும் கூடவில்லை. இந்தத் தருமசங்கடத்திற்கு என்ன செய்வேன்?" என்று யோசித்துக்கடைசியாய் வீடுசெல்வதே உசிதமெனத்தீர்மானித்துக்கொண்டு மைலாவிடமும் கிழவியிடமும் தான் வீடு செல்வதாகச் சொல்லிக் கொண்டான்.

கிழவியும் மைலாவும் மணிவண்ணன் நல்ல முதல் தரமான கறவைப் பசுவென்பதைத் தெளிவுறத் தெரிந்துகொண்டமையினாலும், மணிவண்ணனின் ரூபத்திலும் சங்கீதத்திலும் ஈடுபட்டு அவனை விட மனமற்றவர்களாயிருந்தமையாலும் அவனை மீண்டும் நாளைக்கு வரும்படியாகக் கூறி விடை தந்தார்கள். உடனே மணிவண்ணன் அரைமனத்தோடு அவ் வீட்டை விட்டுப் பிசாசு போலக் கிளம்பி வேகமாக நடந்து தன் வீட்டை யடைந்தான். அவன் வீட்டை யடைந்த தருணமே மஞ்சுளா வீதிக் கதவைத் தாளிட்டுக் கொண்டு புறப்பட்டதைக் கண்டான். இந்த அர்த்த ராத்ரி வேளையில் இவள் எங்கே தனியாகப் புறப்படுகிறாள் பார்ப்போம் என்ற யோசனையினால் அவளறியாதவாறு அவளுக்குப் பின்னாலேயே சென்றான்.

மஞ்சுளா தனது ஆபீஸ் நண்பனின் வீட்டை யடைந்ததும் இவனுக்குவயிற்றில் கபீரென்ற எரிச்சலுண்டாயது. "ஐயோ! அவன் இன்று நடந்த உண்மையைத் தெரிவித்து விடுவானே" என்ற கிலியுண்டாகி, அவன் வீட்டுக் குராட்டின் ஓரமாக நின்று உற்றுக் கேட்டுக்


182846

கொண்டே இருந்தான். அங்கு மஞ்சுளா கத விடித்ததும், கிழவி வந்ததும், அங்கே நடந்த சகல வரலாற்றையும் ஆதி யோடந்த மாய்க் கேட்டுக்கொண்டிருந்த அவன் மனமானது தன் பிழையை எண்ணி உருகிக் கருகத் தொடங்கிவிட்டது. "ஐயோ! இத்தகைய உத்தமிக்கு நாம் த்ரோகம் செய்கிறேமே! அடடா! என்ன அன்பு! என்ன பக்தி! என்னப்ரேமை! என்ன குணம்! என்ன நம்பிக்கை! ஆகாகா! என்பால் கொண்ட உண்மையான பிரியத்தின் முதிற்சியாலன்றோ காலம் நள்ளிரவென்பதையும் பாராது பிசாசு போல் கிளம்பி விட்டாள். அடடா! நாம் இன்று செய்த பிழையை எவ்விதமாக மறைக்க முயல்வது? நான் ஆபீஸை விட்டு வெளிக் கிளம்பியதையும் இவள் தெரிந்து கொண்டாள். மாலை 4 மணி முதல் இது பரியந்தம் வீடு வாராததற்குக் காரணம் என்ன கூறுவேன்? சிறிதும் சந்தேகங் கொள்ளாதபடி யிருக்க வேண்டுமே! அந்தோ! மோகினி தேவதையைப் போல் அந்த மின்னுள் என் மனத்தைக் கவர்ந்து என்னைப் பிடித்துக்கொண்டுவிட்டாளே! அதை நான் எவ்வி தம் மாற்றுவேன்? மஞ்சுளாவின் சந்தேகத்தை எவ்விதம் போக்கு வேன்? ஆகா! என்ன மதியீனம்! என்று தனக்குள் குழம்பி அபார மான கவலைக்குள் ளாழ்ந்து விட்டான்.

மஞ்சுளா கிழவியுடன் புறப்பட்டுச் சென்று விட்டதும் தானும் கூடவே பின் தொடர்ந்து சென்று வீதியிலேயே நின்றான். கிழவி சென்ற சிறிது நேரத்திற்கெல்லாம் கதவை யிடித்து உள்ளே வந்து மஞ்சுளாவின் நிலைமை முற்று மறிந்து தான் என்ன பதிலளிப்பது என்று தயங்கி உட்கார்ந்தான். மீண்டும் மஞ்சுளா மணிவண்ண னின் மோவாயைப் பிடித்துக்கொண்டு "என் அன்பே! நான் கேட்ப தற்குப் பதிலில்லையா! இரவு பட்டினியாய் எங்குச் சென்றிருந்தீர் கள்? நாதா! செய்து வைத்துள்ள சமயலெல்லாம் சில்விட்டு விட்டதே! தாங்கள் இன்னேரம் சென்று வருவதற்கு என்ன காரணம்? இப்பொழுதும் சீட்டாட்டம் பிடித்துக்கொண்டதோ? என்று கொஞ்சலாகக் கேட்டாள்.

சீட்டாட்டமென்று மஞ்சுளா குத்திக் காட்டியதைக் கவனித்ததும் மணிவண்ணனுடைய மனத்தில் அவனுடைய

வஞ்சகமாகிய முள் சுளீரென்று குத்துவதுபோல வேதனை செய்தது. அவன் அவ்வேதனையை அடக்கிக் கொண்டு திடீரென்று எதிர்பாராத விதமாய் கட கடவென்று நகைத்தான். இதைக் கண்ட மஞ்சுளா ஒன்றும் தோன்றாதவளாய் "ஆகா! நாதா! இதென்ன இது! நான் கேட்பதற்குப் பதில் கூறாது திடீரென நகைப்பதன் காரணம் யாது? எனக்கொன்றும் விளங்கவில்லையே?" என்றாள்.

மணிவண்ணன்:—(மீண்டும் நகைத்தபடியே) கண்மணி, மஞ்சுளா! என்னவென்று கூறுவேன். என் மனதிலுள்ளதைக் கூற விடாமல் நகைப்பு என்னைத் தடுக்கின்றது. (ஹி ஹி ஹி ஹி………… என்று விடாது நகைத்தான்).

மஞ்சுளா:— என்ன நாதா! தாங்கள் நகைப்பதும் கூறுவதும் என்னை ஏதோ ஏளனம் செய்வதுபோலவும், ஏமாற்றுவது போலவும் தோன்றுகின்றது. நடந்த உண்மை என்ன? எனக் கறிய விளக்கிக் கூறலாகாதா?

மணிவண்ணன்:—கண்ணே! உன்னையா நான் ஏளனம் செய்கிறேன், அப்படி நினைக்காதே. எனக்கு அடங்காத நகைப்பு வருவதற்கும் நான் வர நேரமானதற்கும் காரணங் கூறுகிறேன் கேள். எனக்கு இன்று தலைவலியும் சிறிது ஜுரமும் தோன்றி வதைசெய்து கொண்டிருந்தன. ஆபீஸில் வேலையே செய்ய முடியவில்லை. நான் 4மணிக்கெல்லாம் வீட்டுக்கு வரப்புறப்பட்டேன். ஆபீஸிலிருந்து வண்டிக்காக வீதியில் நின்றிருந்த சமயம் எனது சிநேகிதர் ஒருவர் வண்டியில் வந்தார். என்னுடைய நிலைமையையும் நான் நின்றிருக்கும் பரிதாபத்தையும் கண்டு சகியாதவராய் என்னருகில் வந்து வண்டியை விட்டிறங்கி என்னைப் பலவந்தம் செய்து அந்த வண்டியிலேயே ஏற்றிக்கொண்டு மருத்துவரிடம் அழைத்துச் சென்று மருந்து வாங்கிக்கொடுத்து, அவர் வீட்டிற்கே என்னை அழைத்துச் சென்றுவிட்டார். நான் எத்தனை மறுத்தும் கேட்கவில்லை. என்னைச் சற்றுநேரங்கழித்துத் தாமே கொண்டுவந்து விட்டு விடுவதாய்க் கூறி அங்கேயே தம்வீட்டில் போஜனம் செய்யும்

படி கட்டாயப்படுத்தினர். இன்று அவர் வீட்டில் ஏதோ விசேஷமாகையால் பலர் போஜனத்திற்கு வந்திருந்தனர்.

அவர் மிகவும் பெரிய மனிதராதலால் அவர் வார்த்தையைத் தட்டமாட்டாமல் தியங்கியவாறு, நீ என் வரவை எதிர்நோக்கி வருந்துவாய் என்றும் நான் உடனே செல்லவேண்டு மென்றும் கூறினேன். அவர் உன்னையும் வரவழைத்து விடுவதாய்க் கூறி பலவந்தித்தார். பிறகு நான் பதில் கூறாது நின்றுவிட்டதோடு உன்னை யழைத்தால் நீ வருவாயோ என்ன சொல்வாயோ என்ற யோசனையினல் வேண்டாமென்று கூறி அங்கேயே நின்றுவிட்டேன். ஏற்கனவே எனக்கு தேக அசுகமாகையினல் களைப்பாக விருந்தது. அதனல் நான் சற்றுப்படுத்தேன். சுகமான காற்று சிலீர் சிலீர் என்று வீசியதால் என்னை மறந்து நான் தூங்கிவிட்டேன். விழித்துப் பார்க்கும்போது மணி பத்தாய்விட்டது. அடடா! என்ன இவ்விதம் மட்டித்தனமாக நித்திரை போய்விட்டோமே என்று கலங்கி எழுந்தேன். அப்போதுதான் அங்கு எல்லோரும் கூடிப்போஜனம் செய்யத் தொடங்கினர்கள்.

பின்னர் நானுங்கூட உண்டெழுந்தேன்; உடனே வீடுசெல்லப் பிரயாணப்பட்டேன். அவர்கள் தங்கள் வண்டி சைதாபேட்டையில் யாரையோ கொண்டுவிடுவதற்குப் போயிருக்கிறதென்றும் வந்தவுடன் அனுப்புவதாயும் தெரிவித்தார்கள். எனக்குக் கடுமையான தலைவலியா யிருந்தமையால் நான் ஓர் அறையில் படுத்துக் கொண்டேன். அங்கு நான்கு பாட்டிமார்கள் என்னெதிரில் வந்தார்கள். அவர்களில் ஒருவர் "மணிவண்ணு! எங்ளுக்குள் ஓர் விவாதம் நடக்கின்றது. அதை விவரமாகச் சொல்லுகிறேன். அதாவது பார்த்தசாரதிப் பெருமாளுக்கு—'பார்த்த சாரதி என்று எதற்காகப் பெயர்வந்தது?' என்று என்னை இந்தம்மாள் கேட்டாள். அதற்கு நான் எனக்குத் தெரிந்ததையும் என்பாட்டி கூறக் கேட்டதையும் சொன்னேன். அது சரியில்லை என்று இந்தம்மாள் சொல்கிருள். அதன் பொருளை நீ சொல் பார்ப்போம்" என்ருள்.

இதைக்கேட்ட நான் முதலில் அவள் கூறியதைக் கேட்டுக்

கொண்டு பிறகு நாம் அர்த்தம் சொல்வோம் என்று எண்ணி பின்னர் "நீங்கள் தெரிவித்த அர்த்தத்தைக் கூறுங்கள்" என்றேன், அந்தம்மாள் தெரிவித்த அர்த்தமாவது:—யசோதை அம்மனுக்குக் கிருஷ்ணபரமாத்மா குழந்தையாயிருந்த நாளில், அவளுக்கு அவல்சாப்பிட ஆசையாயிருந்ததாம். அந்தம்மாளோ பெரிய பணக்காரி. அவளுக்குக் கேவலம் அற்பமான அவல்மேலே ஆசை சென்றதைப் பிறரிடம் தெரிவித்தால் பரிகஸிக்கப் போகிறார்களே என்ற அச்சத்தினால் ஒரு குறுணி நெல்லைத் தானே அவனுக்குப்போட்டு ஓர் அறையில் கதவைத் தாளிட்டுக் கொண்டு உரலிலிட்டு இடித்தாளாம். அந்தம்மாள் மிகவும் செல்வாக்காக இருக்கப்பட்டவள். ஆகையினால் இடிக்கமாட்டாது வருந்தினாளாம். பிறகு தனது பிள்ளையை இடிக்கச் சொன்னாளாம். தாயாரின் வார்த்தையைத்தட்டாதக்ருஷ்ணமூர்த்தி அவலைவேகமாக இடித்துத்தானே புடைத்து அள்ளி அள்ளித் தின்னவும் ஆரம்பித்து தின்றுவிட்டானாம். அதைக்கண்டு கோபங்கொண்ட யசோதை யம்மாள்;க்ருஷ்ணமூர்த்தியை உரலோடு உரலாகக்கட்டி உலக்கையால் அடித்தாளாம். அந்த அடியைத் தாங்காத க்ருஷ்ணமூர்த்தி தேம்பித் தேம்பியழுது"அம்மா!நான் தின்னவில்லையே!என்வாயைப்பாரேன்" என்று வாயைத்திறந்து காட்டினாராம். அவர் என்னவானாலும் க்ருஷ்ணபரமாத்மாவன்றோ! அவர் வாயில் இந்த ஈரேழுபதினாலு உலகமும் தெரிந்தனவாம். அதைக்கண்ட யசோதையம்மாள் ப்ரமித்துத் திகைத்துப் பயந்துபோய், நடுநடுங்கி "ஹா! இதென்ன இந்த க்ருஷ்ணன்வாயில் உலகமுற்றும் தெரிவதுடன் நானும் இந்த க்ருஷ்ணனும் கூடத் தெரிகின்றோமே! இதென்ன மாயம்! இந்த க்ருஷ்ணனை உண்மையில் குழந்தை என்றல்லவா எண்ணினேன். இவன் சாதாரணக் குழந்தையாகத் தோன்றவில்லையே! இது பேயோ பிசாசோ தெரியவில்லையே!அப்படிக் கில்லாவிட்டால் இவ்விதம் தெரியுமோ! ஒருகாலும் தெரியாது. இது பைசாசமோ பூதமோ தான். இனி இதை வீட்டில் வைத்திருந்தால் இது நம்மையே விழுங்கி விடும்" என்று பயந்துகொண்டு அப்பொழுதே அவரை வீட்டைவிட்டு அடித்துத் துரத்தி விட்டாளாம்.

ஐயோ, பாவம்! தாயாரடித்து விரட்டியதும் கிருஷ்ணமூர்த்தி அழுதுகொண்டே அவ்வூரைவிட்டுத் தனக்கு மிகுந்த சிநேகி தனும் இஷ்ட பந்துவுமாகிய அத்தை மகனை அர்ஜுனனிடம் போய்முறையிட்டு அழுது "அத்தான்! எனக்குப்பிழைக்கும் வழியை நீ தான் சொல்லவேண்டும். உன்னைவிட்டு நான் போகமாட்டேன். உன்னிடமே தான் நானிருப்பேன்" என்றானும்.

இவனிடத்தில் அளவுகடந்த வாஞ்சையுடனிருக்கும் அர்ச்சுனன் "அப்பா அம்மாஞ்சி! நீ எங்கும் செல்லவேண்டாம்! என்னிடமே இரு" என்று கூறித் தேற்றினானும். மகா புத்திசாலியாகிய கண்ணன் "உட்கார்ந்தபடியே தண்டத்திற்கு உண்பது கூடாது; நன்றாயிராது. நாம் ஒரு தொழில் செய்துதான் ஜீவிக்கவேண்டும்" என்று கருதி அர்ஜுனனுக்கு வண்டியோட்டும் வேலையிலமர்ந்து அன்று முதல் பிழைக்க வழிதேடிக் கொண்டானும். அர்ஜுனனுக்குப் **பார்த்தன்** என்று ஒரு பெயருண்டாம். அந்தப் பார்த்தனுக்கு ஸாரத்தியம் செய்ததால் **பார்த்தஸாரதி** என்று பெயர் கிருஷ்ணனுக்கு உண்டாய் விட்டதாம். வெகுநாள் வண்டி யோட்டிப் பணம் சம்பாதித்துக் கொண்டு தன் குடும்பத்துடன் திருவல்லிக்கேணியில் வாசம்செய்யச் சென்று ஸ்திரமாய் நிலைத்துவிட்டார். அதனாலேதான் பார்த்தஸாரதி என்ற பெயர் அவருக்கு நிலைத்துவிட்டது. இதுதான் உண்மையான வரலாறு. இதைத்தான் நான் சொன்னேன். இது பொய்யாம் தப்பாம்; என்னென்னவோ சொல்கிறாள்! இது சரியா தப்பா நீ சொல்லப்பா" என்று கேட்டாள். இந்த அழகான கதையைக் கேட்டதும் எனக்கு அடங்காத நகைப்பு உண்டாய் விட்டது. இதற்கு நாம் என்ன பதிற் சொல்வது என்று யோசித்தேன். அதற்குள் வண்டிவந்து விட்டதென்று செய்தி கிடைத்தது. நான் மெல்ல அவ்விடத்தை விட்டு நழுவி வந்துவிட்டேன்; அதை நினைக்கிறேன்; நகைப்பு என்னைக் குலுக்குகின்றது" என்று கூறிக் கொண்டேவந்தான். நமது மடவாரின் செவியில் அவன் பேச்சோ ஒன்றும் விழவேயில்லை. அவள் மணிவண்ணன் மீது கொண்ட சந்தேகமே, அவளை வயிறெரியும்படி வதைக்கின்றது. அவளால் கூடுமான வரையில் தனது முகக் குறியை மறைத்துக் கொண்டு

புன்முறுவலுடன் பேசத் தொடங்கி "நாதா! பேஷ், பார்த்தஸாரதிப் பெருமாளுக்கு உத்யோகங் கிடைத்தது வெகு அழகாயிருக்கிறது. இந்த விஷயத்தை எவ்விதம் கட்டுக் கதையாகக் கூறினீர்களோ அதேபோலத் தாம் கூறும் ஒவ்வொன்றும் கட்டுக் கதை என்பதாகவே எனக்குப் படுகின்றது. ஏன்! உண்மையை எதற்காக மறைக்கவேண்டும்? நாதா! சென்றவிடத்தில் சட்டை, தலைகுட்டை முதலியவற்றை வைத்து மறந்துவிட்டீர்களோ! அதுவும் போகட்டும். முக்கியமான ஓர் அடையாளத்திலிருந்து நீங்கள் சொல்லிய காரணம் வெறும் புரட்டும் விளையாட்டும் என்பதாக எனக்குத் தெரிந்துவிட்டது. நாதா! சென்ற இரண்டு தினங்களாகத் தாங்களிருக்கும் மாதிரியும் பேசும் மாதிரியும் வெகு புதுமையாக இருக்கிறது. அதோடு இன்று இத்தனை நேரமானதற்கும் தங்களிடமுள்ள சில அடையாளங்களினாலேயும் எனது சந்தேகம் அதிகரிக்கின்றது. ப்ராணகாந்தா! தமது எண்ணத்தை ஒளிக்காது கூறலாகாதா?" என்று வெகுவாய் மன்றாடிக் கேட்டாள்.

மணிவண்ணன்:—(உள்ளுக்குள் இடிந்தபடியே வெளிக்குத் தைரியமாய்ப் பேசத் தொடங்கி) அட அசடே! ப்ரமாதமாகப் பேசத் தொடங்கி விட்டாயே. நீ சொல்வது ஒன்றும் எனக்கு அர்த்தமாகவில்லையே! என் மீது ஏதோ சந்தேகங் கொண்டிருப்பது போலல்லவா பேசுகிறாய்? பேஷ்! மஞ்சுளா! என்னை வேசிக் கள்ளனென எண்ணுகிறாய் போலும். பலே! நன்றாய் இருக்கிறது. உனது சந்தேகத்தை நிவர்த்திக்க வேண்டுமானால் என்னுடன் கூடவே புறப்படு. நான் இன்னேரமிருந்த வீட்டிற்கு அழைத்துச் சென்று உனது ஐயத்தை நீக்குகிறேன். புறப்படுகிறாயா! இப்புவியில் உன்னைவிட மேலான பொருள் எனக்கு வேறுமுண்டோ! கண்ணே! வீணான சந்தேகத்தில் மனத்தைக் கலக்கிக் கொள்ளாதே! அகாலமாய்விட்டது. படுத்துக்கொள்.

மஞ்சுளா:—எனது துரையே! நான் அகாரணமாகவும் வீணாகவும் தங்கள் பால் சந்தேகங் கொள்ள மாட்டேன். இரண்டு நாளாய்த் தாங்களிருக்கும் மாதிரியும் தற்போது தங்களிடம் காணும் அடையாளமும் எனக்குச் சந்தேகத்தைக் கொடுக்கின்றன.

நேற்றுக் காலையில் நான் எழுப்பியபோது, தாங்கள் தம்மை மறந்து "ஆகா! அந்த ஆரணங்கின் தரிசனமும் அமிருதம் எனக்குக் கிடைக்குமோ?" என்று வாய்விட்டுப் பிதற்றிக்கொண்டே எழுந்தீர்களே! தாங்கள் திடீரென்று அவ்விதம் கூறியதேன்? அதுவும் தவிர தமது கன்னத்தில் ஸ்திரீகள் இட்டுக் கொள்ளும் சாந்துப் பொட்டின் வட்டமும், தாடையில் விழியில் தீட்டிக்கொள்ளும் மையும் ஒட்டிக்கொண்டிருப்பதேன்? அத்துடன் விட்டதா? ரோஸ் பவுடரின் பரிமளமும் கலரும் முகத்தில் திட்டுத் திட்டாகப் படிந்திருப்பதற்குக் காரணம் யாது? என் கண்ணாளா! இவையெல்லாம் பார்த்த பின்னரும் சந்தேக முண்டாகாதிருக்குமா? என் மனம் சகிக்கவில்லையே! இதோ பாருங்கள். வெற்றிலை பாக்குப் போட்டுக் கொண்டவுடன் அப்படியே தமது தாடையில் முத்தமிட்டிருப்பதுபோலத் தாம்பூலத்தின் வடு நன்றாகப் படிந்து உலர்ந்து துண்டு வெற்றிலையும் ஒட்டிக்கொண்டிருக்கிறது! இவை யெல்லாம் என்ன வித லீலைகளால் உண்டாயின? தாங்கள் சினேகிதர் வீட்டில் சென்று துயின்று போஜனம் செய்து வந்ததாகத் தெரிவிப்பதானது என்னை முற்றிலும் வஞ்சித்து ஏமாற்றுவதாகும் என்பது தெளிவாக விளங்கவில்லையா! நாதா! என்ன இது மௌனம் சாதிக்கிறீர்கள்?" என்று அவள் சொல்லிக் கொண்டே வரும்போது வணிவண்ணன் திகைத்துப் பிரமித்து "ஐயோ! முட்டாள் தனமாக மோசம் போய்விட்டோமே?" என்று தனக்குள் எண்ணிக் கலங்குகிறான். எனினும் அதை வெளிப்படுத்தாது விளையாட்டாயும் அலக்ஷ்யமாயும் நகைத்தபடியே "ஏதேது மஞ்சுளா! ஸ்ரீரங்கம் பங்குனி உத்திர உற்சவம் எப்போதாகிலும் சேவித்திருக்கிறாயா? அங்கு மட்டையடியன்று நாச்சியார் பெருமாளைக் கேட்கும் கேள்விகள் போல என்னையும் கேட்க ஆரம்பித்துவிட்டாயே! பேஷ்! பேஷ்! வெகு வேடிக்கை! மஞ்சுளா! உன்னை வக்கீல் பரிக்ஷையில் படிக்கவைத்து வாதிக்க விட்டால் நன்றாக (க்ராஸ்) குறுக்குக் கேள்வியும் கோணல் விசாரணையும் செய்வாய்; நிச்சயம். பலே! நாலைந்து வயதுள்ள ஒரு பெண் என் சினேகிதனுக்கு இருக்கிறது. அது என்னிடத்தில் மிகப் பக்ஷமாக விருக்கும். அந்தப் பெண் என்னைக் கண்டதும் என் மேலே விழுந்து துகைத்து என்னைக் கட்டி முத்தமிட்டு நசுக்கி



அளவுகடந்த ஆநந்தத்துடன் அங்கு தானுங்கூட அமர்ந்து அருகிலிருந்த தபேலாவை எடுத்துத் தனக்குத் தெரிந்தவரையில் வாசிக்கத் தொடங்கினுன். 32-வது பக்கம்.

விட்டது. எனது தலைவலிக்கும் தேக வலிக்கும் அது மிகவும் இதமாக விருந்ததால் பேசாதிருந்தேன். அது வெற்றிலை போட்டுக் கொண்டிருந்தது. அதன் காவி படிந்திருக்கலாம். சாந்தும் மையும் அப்படியே இருக்கும். இதைக் கொண்டுவிபரீத அர்த்தம் செய்துவிட்டாயே!

மஞ்சுளா:—ஓகோ!நான் விபரீதமாகச் செய்யவில்லை. ஸ்ரீரங்கம் உற்சவத்திற்குப் போய் வந்தால் இன்னு மதிகமான அடையாளங் களைத் தெரிந்துகொண்டு வந்திருக்கலாமே! அப்படி நான் சொல்வது நாச்சியார் கேட்டதுபோல இருப்பின் தாமும் பெருமாள் செய்தது போலன்றோ செய்திருக்கவேண்டும்? அதில் தடையுண்டோ! நாதா! பேதையாகிய அடியாள் தம்மை யண்டி யிருக்கையில் என்னைக் கைவிட்டுவிடுவது தருமமோ! பின்னர் ஏழையான் எவ்விதம் உய்வேன்?—என்று இவன் முடிப்பதற்குள் மணிவண்ணன் பேசத்தொடங்கி, “என்ன! என்ன! நாஞ! உன்னைக் கைவிடுவதா! என்ன இது! உனது மூளை சற்றுக் கலங்கி விட்டதா! என்ன நான் கூறுவதை நீ நம்பாது மேலும் மேலும் ப்ரஸ்தாபித்தால் இதற்கு முடிவு எவ்விதம் ஏற்படும்?உனது வீணை யோசனையை விட்டு ஒழி. நேற்று நான் வாய் பிதற்றியதற்குக் காரணம் கூருமல் மறைத்த தாக எண்ணுதே! வெட்கம் பாதித்ததால் பேசாதிருந்து விட்டேன். இப்போது உன் சந்தேகம் ஒழிவதற்காகக் கூறிவிடுகிறேன். அதாவது முந்தாநாளிரவு வெகுநேரம் விழித்துப் பின்னர் துயின்ற தால் பித்த மதிகரித்துவிட்டது. அதனல் நமக்கு ஓர் பெண் குழந்தை பிறந்ததாகவும் அதுபெரியதாய் வளர்ந்து விவாகம் செய்ததாயும், அந்தப் பெண் திடீரென இறந்துவிட்டதாயும், அந்த துயரத்தினுல் நான் அனேகவிதமாய் பிரலாபித்ததாயும் கனவு கண்டேன். திடீரென அப்போது நீ எழுப்பியதனல் எழுந்து விட்டேன். நான் விழிக்கும்போது கூறியதை நானறியமாட்டே னென நினைக்கின்ருயோ? நான் அறிவேன். வெட்கத்தினுல் பேசா திருந்து விட்டேன். அடாடா! மணி இரண்டு அடித்துவிட்டது; படுத்துக்கொள். வெகுநேரமாய்விட்டது” என்று கூறியபடியே மஞ்சுளாவைக் கட்டியணைத்து இழுத்துச் சென்று சயனமஞ்சத்தில்

கிடத்தித் தானும் படுத்துக்கொண்டான். பழைய வழக்கம்போல வித்யாசமின்றி மஞ்சுளாவிடம் சந்தோஷமாயும் உல்லாசமாயும் இரவைக் கடத்தினன்.

மணிவண்ணன் என்னதான் தேற்றி, ஆற்றிக்குலாவினலும் அவள் மனமென்னவோ சமாதானமடையவில்லை. அதிகமாகத் தன் கணவனிடம் தர்க்கிக்கவும் பயந்தவளாய்ப் பேசாது அவன் விருப்பப்படியேநடந்து இரவை யோட்டினள்.பொழுதும் புலர்ந்தது. அவள் வழக்கம்போல் எழுந்து தனது க்ருகக்ருத்யங்களைச் செய்யத் தொடங்கினள். மணிவண்ணன் சமயத்திற்கேற்றவாறு பொய்யுரைத்தானயினும் அவன் மனதில் அவனை மீறிய குழப்பமும் ஒருவிதமான சங்கடமும் தோன்றி அவனை வதைத்துக் கொண்டே இருந்தன. எப்போது சென்று மைலாவைக் காண்போம் என்ற துடிப்பு அவனை விட்டகலவில்லை. மஞ்சுளாவின் பரிபவத்தையும் அவள் தன் பால் கொண்டுள்ள கரைகாணுத பக்தி விச்வாசத்தையும், உண்மைக் காதலையும், நம்பிக்கையையும் பார்க்கப் பார்க்க "அந்தோ! இவளுக்குத் துரோகமெண்ணி விட்டோமே" என்ற திகிலும் ஏக்கமும் தோன்றி அவனை வதைத்துக் கொன்றுகொண்டே இருந்தன. அவன் மனத்தைத்திருப்பச் சாத்திய மற்றவனுய்த் தனது நித்யகடனையும் பூஜை முதலியவற்றையும் முடித்துக்கொண்டு, போஜனம் செய்துவிட்டுத் தாம்பூலந் தரித்துக் கொண்டு அன்று எதுவும் அதிகமான சம்பாஷணை செய்யாமல் ஆபீஸுக்குப் புறப்பட்டான். மஞ்சுளாவை யழைத்து அவள் முகவாட்டத்தைக்கண்டு "கண்ணு! இன்னும் உனது சந்தேகம் ஒழியவில்லையா! உனது முகம் வேறுபட்டே இருக்கின்றதே! காரணம் யாது? நான் கூறுவதில் உனக்கு நம்பகமில்லையா! சட்டை முதலியவற்றை எடுத்துப் போட்டுக்கொண்டு செல்வதற்குப் பொழுது சரியாய்விடும்; நான் சென்றுவருகிறேன். ஒருக்கால் நேற்று வேலைகள் பாக்கி யிருக்குமாயின் இன்று ஆபீஸிலிருந்து வருவதற்கு நேரமானுலுமாகும். அதைக் குறித்து வருந்தாதே. நேற்றுப்போல் தேடியலையாதே. நான் சென்றுவருகிறேன்." என்று கூறி அவ்விடத்தைவிட்டுச் சரேலெனப் புறப்பட்டுவிட்டான்.

எதுவுமே பதில் கூறவிடாமல் துக்கம் மஞ்சுளாவின் தொண்டையை அடைத்துக் கொண்டது. அவள் கண்களில் நீர் தாரை தாரையாகப் பெருகியது. அந்த நிலையில் அவள் வீதிக்கதவைத் தாளிட்டுக்கொண்டு படுத்துவிட்டாள்.

வீட்டைவிட்டுச் சென்ற மணிவண்ணன் நேரே கடைக்குச் சென்று பழதினுசுகள் 5 ரூபாய்க்கும், பக்ஷண தினுசுகள் 5 ரூபாய்க்கும் உயர்தர வெற்றிலையும், வாசனைப் பாக்குத்தூளும்,செண்டுகளும் புஷ்பங்களும் வாங்கிக்கட்டி எடுத்துக்கொண்டு நேரே ஸில்க்கு ஷாப்பை யடைந்து அங்கு 15 ரூபாய் பெறுமான ரவிக்கையொன்று வாங்கிக் கொண்டு வாடகைக்கு ஒரு மோட்டார்வண்டியை அமர்த்திக் கொண்டு மைலா வீட்டை யடைந்தான்.

இவன் வருவதை யறிந்து அபூர்வமாய் அலங்காரஞ் செய்து கொண்டு வெகு ஒய்யாரமாய் எதிர்நோக்கி நின்ற மைலாவைக் கண்ட மணிவண்ணன் கொண்ட ஆநந்தம் கொஞ்சமல்ல; ஒரு எல்லை யில்லாததா யிருந்தது. அவன் தான் கொண்டுவந்தவைகளை யெல்லாம் அங்குள்ள மேஜையின்மீது வைத்துவிட்டு மைலாவைக் காம வெறிகொண்ட பார்வையினால் பார்த்தபடியே, "என் கண்மணி! உனக்கு எதைத்தான் கொடுப்பது? எதைக்கொடுத்தால் ஈடாகும்? விலையே கிடையாதென்பதை யான் அறிவேன்; ஆயினும் எனது மனவேட்கையாலிதைக் கொணர்ந்தேன். இதை விலக்காது பெற்றுக் கொள்ளவேண்டும்." என்று கூறியபடியே ரவிக்கையைத் தன் கையிலெடுத்து நீட்டினான்.

மாயஜாலங் கற்ற மைலா மயக்கிக் குலுக்கிப் பிலுக்கிக் கண்ணை யடித்தபடியே தன்கரம் மணிவண்ணனின் கரத்தில் படும் படியாக அந்த ரவிக்கையை வாங்கிக் கண்ணில் ஒற்றிக்கொண்டு "ஆகா! தாங்கள் எல்லாவற்றிலும் தேர்ச்சிபெற்றவர் என்பது நிதர்சனமாக விளங்குகின்றது. இத்தகைய அபூர்வமானதும் எழில் நிறைந்தும் நூதனமானதுமான மோஸ்தர் பார்த்து ரவிக்கை வாங்கிக் கொண்டுவந்திருப்பதிலிருந்து தாங்கள் மெத்த சாமர்த்தியசாலி என்பது விளங்குகின்றது. ஆகாகா! என்ன அழகு! இதுபரியந்தம் நான்

இவ்விதமான ரவிக்கை போட்டதேயில்லே. ஆமாம்! காலேமுதல் தங்கள் வரவையே எதிர் பார்த்திருந்தேனே! இத்துணே நேரம் எதனுலாயது?'' என்று கூறிக்கொண்டே அவன் பக்கலி லமர்ந்தாள்.

அப்போது மணிவண்ணனுக் குண்டான ஆநந்தத்தை அள விட்டுச் சொல்ல முடியுமோ? பல்லிளித்தபடியே "என்னபோ! கண்ணு! நேற்றிரவு இவ்விடத்தைவிட்டு ஏன் சென்றேனென ஆய் விட்டது. இரவு முற்றும் உன்னேப் பிரிந்ததால் நித்திரை என்பதே கொள்ளாமல் தவித்துவிட்டேன்; விடிந்த பின்னர் அயர்ந்து தூங்கி விட்டேன்; எழுந்து எனது வேலேகளே முடித்துக்கொண்டு இதோ வந்தேன். ஆபீஸுக்கு நேரமாய்விட்டது;ஓடவேண்டும். சென்று 5 மணிக்கு வந்து விடுகிறேன்.கண்மணி!பாட்டியுடன்சொல்லு!''என்று கூறிவிட்டு தனது சட்டைகளே எடுத்து அணிந்துகொண்டு மைலா வைப்பிரிய மனமில்லாதவனுய் அவளேக்கட்டித் தழுவி முத்தமிட்டு விட்டு ஆபீஸுக்குச் சென்றுன்.

நேற்றுப்போலவே இவனுக்கு ஆபீஸில் இருக்கை கொள்ளவே இல்லே.இவன் தள்ளாடித்தத்தளிக்கின்றுன்;மைலாவின் நிணவாகவே வேலேசெய்கிருன். மணி இரண்டு அடித்தது. அவனுல் அதற்கு மேலும் அங்கு இருக்கமுடியவில்லே. அவன் புறப்பட்டு விட்டான். முதல் நாள் மஞ்சுளா இவனேப்பற்றி விசாரித்த உத்யோகஸ்தரைக் கண்டு அவருடன்''ஸார்!இன்னும் எனக்கு உடம்புசரியில்லே.அதோடு ஓர் முக்கியமானஜோலியாக மாம்பலம்வரையில் போகவேண்டியிருக் கிறது. தயவுசெய்து தாங்கள் என் வீடுசென்று நான் இரவு நேரங் கழித்து வந்தால் வருவேன். இல்லேயேல் நாளேக்குத்தான் வருவேன்; கவலேப்பட வேண்டாம் என்று கூறிவிடுங்கள்'' என்று எச்சரித்துவிட்டு அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டுவிட் டான்; அவசரமாக ஓர் வண்டி யமர்த்திக்கொண்டு மைலாவின் வீட்டை யடைந்தான். அப்போது மைலா தம்புருச்ருதியுடன் பாடிக் கொண்டிருந்தாள். மணிவண்ணன் அளவுகடந்த ஆநந்தத்துடன் அங்கு தானுங்கூட அமர்ந்து அருகிலிருந்த தபேலாவை எடுத்துத் தனக்குத் தெரிந்தவரையில் வாசிக்கத் தொடங்கினுன். இவன்

தாளத்திற்கும் மைலா பாடுவதற்கும் இசைந்து மிக இன்பமாயிருந்தபடியால் ஒரு பெரிய கச்சேரிபோல் ஆய்விட்டது. சுமார் 4,5 மணிக்குச் சங்கீதம் முடிந்தது.

மைலா:— ஏது 2 மணிக்கெல்லாம் வந்துவிட்டீர்கள்? இன்று லீவா?

மணிவண்ணன்:—ஐயோ! லீவுமில்லை; ஒன்றுமில்லை. இந்த மூன்று நாளாக உன்னைவிட்டு ஒருவிநாடியேனும் பிரிய மனம் வரவில்லை. ஆபீஸ் வேலைகளெல்லாம் தப்புத் தப்பாக விழுகின்றன. நினைவு முற்றும் உன்னிடமே இருக்கிறது. ஆகையினால் வேலையில் தப்புச்செய்து அபராதத்திற் குள்ளாவதைவிட லீவுவாங்கிவிடுவது நலமென எண்ணி லீவு போட்டுவிட்டு வந்துவிட்டேன். வந்தவிடத்தில் சங்கீதாம்ருதமும் உன்னுடைய தரிசனமும் கிடைத்தன.

மைலா:—என்னபோங்கள்.எனக்கும் தங்களை அன்று நாடகக் கொட்டகையில் பார்த்தது முதல் அபாரமான பிரியம் என்னை யறியாமல் உண்டாய் விட்டது. சதா தாங்கள் இவ்விடத்திலேயே இருந்துவிட்டால் எனக்கு மெத்த சந்தோஷமாக விருக்கும்; என்ன செய்யலாம்?

மணிவண்ணன்:—அதற்குமேலான ஆசையும் மதிப்பும் எனக்கும் ஏற்பட்டு விட்டதனால்தானே உன்னை முன் பின்னறியாவிடினும் நானே உன்வீடு தேடி புகுந்து விட்டேன். இரவு பகலாக ஓர் கற்ப காலம் உன் கூடவே இருந்தாலும் என்னுவலடங்காது. என்ன செய்வேன்? தற்கால நாகரிகப்படி, பணமிருந்தாலும் ஏதாவது உத்தியோகத்திலிருந்தாலல்லவா கௌவரமாயிருக்கிறது.

மைலா:—ஆமாம் ஆயினும் தாங்கள் இனி அநாவசியமாய்க் கஷ்டப்படவேண்டாமென்று நினைக்கிறேன். ஏனெனில் தாங்கள் எனது கதைக்குப் பின்பாட்டிற்கு வந்து உதவினால் அந்த வரும்படியைக் கைச்செலவிற்கு வைத்துக் கொள்ளலாம். தங்களை ச்ரமப்படவிடுவது எனக்குச் சரியாகத் தோன்றவில்லை. தாங்கள் இனிமேல் காலக்ஷேபத்திற்கு வேண்டிய பாடல்களைப் பாடம்செய்யுங்கள் இந்த நோட்புத்தகத்தில் யாவும் எழுதி வைத்திருக்கிறேன்'' என்று கூறியவாறு ஒரு

நோட்புத்தகத்தை எடுத்துக் கொடுத்தாள். இதற்குள் கிழவி பலகாரங்கள் கொண்டுவந்தாள். இருவருமாக அவற்றைப் புசித்துப்பின் நோட்டிலிருக்கும் பாட்டுகளை மைலா சொல்லிக்கொடுப்பதும் மணிவண்ணன் கற்றுக் கொள்வதுமாக மாலை ஆறுமணி வரையில் நடந்தது. பிறகு கிழவியிடம் சொல்லிக்கொண்டு ஒரு வாடகை மோட்டார்காரில் ஏறி இருவரும் கடற்கரைக்குப் போயினர். இரவு எட்டு மணிவரையில் இருவரும் கடற்கரையில் வெகு உல்லாசமாகப் பேசியும் உலாவியும் மகிழ்ந்து பின் வீடுதிரும்பினார்கள். மணிவண்ணன் அன்று இரவு அவ்விடத்திலேயே தங்கிவிட உத்தேசம் செய்துவிட்டான். இருவரும் ராப்போஜனத்தை முடித்துக்கொண்டு மன்மதனது பள்ளியறை போன்று அலங்காரம் செய்திருக்கும் மைலாவின் பள்ளியறைக்குள் சென்றுவிட்டார்கள்.

மணிவண்ணன் சென்ற பின்னர் கதவைத் தாளிட்டுக்கொண்டு சென்ற மஞ்சுளா மனவேதனையினால் அன்னத்தை நாடவில்லை. "ஐயோ! நாயகனின் மனம்மாறி வேறுபட்டு விட்டதே! என்ன செய்வேன்?" என்றெண்ணிக் கலங்கியபடியே வழக்கம்போல வீட்டு வேலைகளைச் செய்துவிட்டுக் கணவன் வரவை எதிர்பார்த்துக் கொண்டே இருந்தாள். அன்று வீட்டு வேலைக்காரியைத் துணைக்கிருக்கும்படி முன்னெச்சரிக்கையாகச் சொல்லிவிட்டாள். மணி 7 அடித்துவிட்டது. கணவன் வந்து சேரவில்லை. அன்றும் அவள் மனக்குழப்பத்துடன் வீதியில் நின்றிருந்தாள். அத்தருணம் முதல் நாளிரவில் தன் கணவனைப்பற்றிச் செய்திசொன்ன முதலியார் அவ்வழியே வந்தார். அவரைக் கண்டதும் மஞ்சுளாவின் மனந்திடுக்கிட்டது. மெல்ல நடைப்பக்கம் வந்துவிட்டாள். அங்கு வந்த முதலியார் மஞ்சுளாவின் பதிபக்தியைக் கண்டு மனம் பூரித்தவராய் அங்கு உட்கார்ந்திருக்கும் வேலைக்காரியை நோக்கி "ஆயா! இந்தவீட்டு ரெட்டியார் ஏதோ அவசரஜோலியினால் பகல்2 மணிக்கே மாம்பலம் சென்றுவிட்டார். இன்றிரவு வந்தாலும் வருவாராம். இல்லாவிட்டால் அவ்விடத்திலேயே தங்கிவிடுவாராம். நேற்றுப் போல கவலைப்பட வேண்டாமென்று சொல்லிவிடச் சொன்னார். நான் சென்று வருகிறேன்" என்று கூறிப் போய்விட்டார்.

இதைக்கேட்டதும் நமது மஞ்சுளாவின் சந்தேகமும் கலவரமும் அதிகரித்தன. தாங்கவியலாத துக்கம் மேலிட்டுவிட்டது. அவள் கண்ணீர் உதிர்த்தபடியே உள்ளேவந்து பேசாது படுத்துவிட்டாள். அன்று பூராவும் ஒருவாய்த் தண்ணீரும் குடிக்காமல் சுத்தபட்டினியாகவே கிடக்கின்றாள். அவளது மனவிசாரத்தில் ஒன்றும் தோன்றாது துயரப் பட்டுக்கொண்டே அயர்ந்து தூங்கிவிட்டாள். விடிந்தெழுந்து பார்த்தாள். அப்போதும் தனது நாயகன் வராமையைக் கண்டு கலங்கியவாறு முதல்நாள்செய்த சமயலே வேலைக்காரிக்குப் போட்டுவிட்டு, வழக்கம்போல் அன்று சமயல்செய்யத் தொடங்கினாள். தன் வேலைமுற்றும் செய்துவைத்துவிட்டுக் காலைப்போஜனத்திற்குத் தன் நாயகனின் வரவை எதிர்பார்த்தும் அவன் வரவில்லை. மணி பகல் 11 ஆய்விட்டது. இவளுக்கோ ஒன்றுமே தோன்றாது தவித்துக்கொண்டே யிருக்கிறாள்.

மணிவண்ணன் வெகு இன்பகரமாக இரவைக் கழித்து மறுதினம் விழித்தான். அவனுடைய மனம் எத்தகைய சந்தோஷத்தை யடைந்தபோதிலும் மஞ்சுளாவின் எண்ணமானது இடை இடையே திடீர் திடீர் என்று தோன்றாமலில்லை. அவன் காலை போஜன மருந்திவிட்டுப் பாட்டுக் கற்றுக்கொள்ள உட்கார்ந்தான். ஆபீஸை அறவே மறந்துவிட்டான். மணி 10 அடித்துவிட்டது. மணியடித்த ஓசைகேட்ட பின்னரே அவனுக்கு ஆபீஸ் நினைவு உண்டாயது. உடனே அவன் தனது சட்டைப் பையிலிருந்து ஒரு கடிதமெடுத்து அதில் தனக்கு ஜுரமென்றும் ஒருவாரம் லீவுவேண்டுமென்றும் எழுதிப்போட்டு விட்டான். மணிவண்ணன்வேலைக்கமர்ந்த நாள் முதல் இதுவரையில் அநாவசியமாக லீவு எடுத்ததில்லையாகையினால் லீவுகிடைத்துவிடுமென்பதுபற்றி அவனுக்குப்பூர்ணமானநம்பிக்கைஉண்டாயது. பகல் பதினொரு மணிவரையில் அவ்விடத்திலே பாட்டுக் கற்றுக்கொண்டான். பின்னர் “இப்பொழுதும் வீடு செல்லாதிருப்பது அழகாகாது” என்று தனக்குள் தீர்மானித்துக்கொண்டு மைலாவிடமும் கிழவியிடமும் சொல்லிக்கொண்டு தான் மாம்பலத்திலிருந்து வருபவன்போல கபட நாடகம் நடிக்க வெண்ணி ஒரு சுமை கீரைத்தண்டும், கீரையும், தாமரை இலையும், கத்திரிக்காயும் வாங்கி

மூட்டை கட்டிக்கொண்டு நேரே வீட்டை யடைந்தான். மணி வண்ணன் வரவை வெகு ஆவலோடு எதிர்நோக்கி யிருந்த மஞ் சுளா தன் காந்தன் வந்ததைக் கண்டதும் எழுந்து மரியாதை செய்து வணங்கினளேயன்றி முன்னுள் கேட்டதுபோல் எதுவும் கேட்க வில்லை. மணிவண்ணனைப் பார்த்த உடனேயே அவளுக்கு இன்ப மும் துன்பமும் உண்டாயின. அதனால் கண்களிருந்து நீர் பெருக ஆரம்பித்தது. அவனுடைய மூட்டையை வாங்கிவைத்தாள். வெந்நீரை விளாவிவைத்து நாமம் முதலியவற்றைச் சித்தமாக வைத்துவிட்டு "நாதா! ஸ்நானம் செய்ய வாருங்கள்" என்று கண்ணீர் உதிர்த்தபடியே கூறிவிட்டு வாளாவிருந்தாள்.

எத்தகைய கன்னெஞ்சனுக விருப்பினும் நமது மஞ்சுளவல்லி யினது பரிதாபகரமான நிலைமையைக் கண்டதும் மனமிளாகாம லிராது. இரண்டு நாளாக பட்டினி கிடப்பதால் மஞ்சுளாவின் தேகம் மெலிந்துவிட்டது. ப்ராணன் போய்விடும்படியான நிலைமைக்கு அவள் வந்துவிட்டாள். அவனருகே கொடிபோல நின்று கண்ணீர் பெருக்கினள். அதைக்கண்ட மணிவண்ணன் திகைத்து விட்டான். மேலும் அவன் தானுக முன்போல் அதிகமாகப் பேசாமல் வாளா விருப்பதால் தனது மாறுதலை முற்றும் மஞ்சுளா அறிந்து கொண் டாளென்பதை நன்ருகத் தெரிந்துகொண்டான். அவளது நிலைமை அவனை பாதித்துக் கலக்குகின்றது. என்ருலும் மைலாவின் உருவம் கண்களை விட்டு நீங்கவில்லை. அவன் தனது உடைகளைக் களைந்து விட்டு ஸ்நானஞ் செய்து திருமணணிந்து பூஜை முடித்துச் சாப்பிட உட்கார்ந்தான். அவனுடைய மனதும் விசாரப்பட்டே யிருப்ப தனல் ஆகாரம் விருப்பமுடன் பிடித்தமாக ஏற்றுக்கொள்ளவில்லை. "ஆகா! மனத்தை யடக்க வியலாது அனியாயமாய்க் கெட்டுவிட் டோமே!" என்று நினைக்கும்போதே பகீர் என்று அவன் வயிற்றில் இடி இடிக்கின்றது போலான பரம வேதனையுண்டாய்க் கல்லாக ஆக்கிவிடுகின்றது. மஞ்சுளாவின் முகத்தைப் பார்க்க வொட்டாமல் வெட்கமும் துக்கமும் தோன்றி வதைக்கின்றன். ஆயினும் பேசா திருப்பது சரியல்லவென்று எண்ணியவனுய் மிகுந்த ப்ரயாசையுடன் முகத்தில் தெளிவு உண்டாக்கிக் கொண்டு மஞ்சுளாவை நோக்கி

பேசத் தொடங்கி, "என்ன! மஞ்சுளா! இன்னமும் என்மீது கொண்ட சந்தேகம் நிவர்த்தி யாகவில்லை உனக்கு! பேசாது மவுனம் சாதிப்பதைப் பார்த்தால் என்மீது அடங்காத கோபம் கொண்டிருப்பதாகத் தெரிகின்றதே! எதோ! சற்று நகை பார்ப் போம்" என்று கொஞ்சலாகக் கூறினன்.

இது கேட்ட மஞ்சுளா, "உம். நாதா! என்னைக் கண்ட பிறரும் தாங்களும் நகைக்கும் படியான நிலைமையில் என்னை ஈசன் வைத்து விட்டானே! எனக் கினி நகையும் வேண்டுமா! எனது நகையையும் காணத் தமக்கு நினைவிருக்கின்றது வியப்பாகவே இருக்கின்றது!" என்று பேசமாட்டாமல் ஹீன சுரத்துடன் கூறினள்.

மணிவண்ணன்:—என்ன! என்ன! உன்னைக் கண்டு பிறர் நகைப்பதா! அதென்ன அப்படிக் கூறுகின்றாய். நானுமா நகைக் கிறேன், பேஷ்! மஞ்சுளா! என்ன இது நீ ஏதோ ஒருமாதிரியாக இருக்கிறாயே! எத்தனையோ நாள் பட்டினி கிடந்தவள் போல் பேசுகின்றாயே! நான் வராததால் நீ கலங்குவாய்; போஜனம் செய்திருக்க மாட்டாய் என்று நேற்றே எண்ணினேன். அப்படியே தான் நடந்திருக்கிறது. என் ஆபீஸ் நண்பரிடம் சொல்லி யனுப்பினேனே, தெரிவித்தாரா! மாம்பலத்தில் ஓர் பங்களா நயமாக விலைக்கு வந்திருக்கிறதென்று ஓர் நண்பர் தெரிவித்தார். நமக்கு அதை வாங்கிக் கொள்ளலாமென்று தோன்றியதால் அங்குச் சென்று பார்த்தேன். பங்களா மிகவும் நன்றாகத்தானிருக் கிறது. ஆனல் விலை படியவில்லை யாதலால் இரவு அங்கு தங்கும்படி நேர்ந்தது. காலையில் இதோ வந்தேன். அங்கு கீரை, கீரைத்தண்டு, கத்தரிக்காய் முதலிய வஸ்துக்கள் மிகவும் ருசியாக இருக்குமாம். ஆதலால் அவைகளை வாங்கிக் கொண்டு வந்தேன். அந்த பங்களா ஒரு ஆயிரம் ரூபாயில் தகராரிலிருக்கிறது. போனல் போகிற தென்று வாங்கி விடலாமா என்று ஒரு சமயம் தோன்றுகிறது. ஒரு சமயம் பிறகு பார்த்துக் கொள்வோ மெனத் தோன்றுகின்றது. என்ன செய்யலாம் சொல்லு.

மஞ்சுளா:—முந்தின தினம் இரவு கூறியது போலான கட்டுக் கதை ஏதாகிலுமுண்டோ? "க்ருஷ்ணன் வெண்ணெயை யெல்லாம்

திருடித்தின்று விட்டானும்! அவனைக் கோபியர்கள் துரத்தி யடிக்கத் தீர்மானித்ததையறிந்த க்ருஷ்ணன் தான் ஒன்றையும் அறியாதவன் போல ஓடோடியும் வந்து வெகுதூரமாகிய திருவள்ளூரில் படுத்துக் கொண்டு தன்னை அவர்கள் தேடிவந்தாலும் தெரியாதிருக்கும் பொருட்டு கிருஷ்ணனென்கிற பெயரை மாற்றித்தாம் வெகு வீரத் துடன் வந்து ஒளிந்து கொண்டதற்காக வீரராகவன் என்ற பெயரை வைத்துக்கொண்டானும்'' என்று சொல்வீர்களென்றல்லவா எதிர் பார்த்தேன். கடைசியில் பங்களாவில் குடி யிறங்கிவிட்டீர்களா! சரிதான். நாதா! தங்களுடைய வார்த்தையிலிருந்தே தாங்கள் கூறுவது முற்றும் பொய் என்பது நன்முக விளங்குகின்றது. தாங் கள் வீதியில் வரும்போதே என்று மில்லாத பரிமளம் குமுகுமு என்று வீசியது. தாங்களருகில் வந்ததும் தங்களிடம் தான் அப் பரிமளம் என்பது தெளிவாகத் தெரிந்ததுடன் தங்கள் வேஷ்டியில் கந்தம் பசேலெனப் படிந்திருப்பதும் தங்கள் சிகையில் அன்னபக்ஷி யினுடைய இறகு ஒட்டிக்கொண்டிருப்பதும் எனது ஐயத்தை ஊர் ஜிதப் படுத்துகின்றன. அன்னப் பக்ஷியின் இறகினுலான தலையணை யில் தாங்கள் படுத்திருந்ததாகத் தெரிகிறது. மாம்பலத்தில் இவ்விதமான கேளிகாத் திரவியமும் அம்லதூளி மெத்தையும் கிடைத்தது தங்கள் புண்ணிய வசந்தான். நாதா! வேண்டாம். என்னிடம் ஒளிக்கவேண்டாம். என்னுயுள் காலத்தில் ஒரு போதும் கவலை என்பதே பட்டறியாத என் மனம் கடந்த சில தினங் களாக அடைந்துள்ள கலக்கத்தினுல் என்னுயிர் சீக்கிரத்தில் நீங்கிவிடும் போல் இருக்கிறது. தமது மனத்தை மாற்றிய மாபாவி யாரோ அதை எனக் குரைக்கலாகாதா!—என்று பேசிக்கொண்டே வருகையில் மணிவண்ணன் மஞ்சுளாவின் யூகமான நுண்ணறிவை யும் அவளது க்லேசத்தையுங் கண்டு வியந்து தன்னுடைய மவுட்டீகத் தனத்தை எண்ணி வருந்திய வாறு அவளை நோக்கி ஒரு விதமான நகைப்பு நகைத்தபடியே, ''மஞ்சுளா! ஏதேது! நீ விட மாட்டாய் போலிருக்கிறதே! சரி! சரி! நான் உன்னோடு பேசிக் கொண்டே இருந்தால் ஆபீஸுக்குப் போக நேரமாய்விடும். இரவு பேசிக்கொள்வோம்!'' என்று கூறியபடியே போஜனத்தை முடித்துக்

கொண்டு எழுந்து சட்டையை மாட்டிக்கொண்டு தாம்பூலத்தையும் எடுத்துக் கொள்ளாது சென்று விட்டான்.

தன் கணவன் தான் சொல்லிய வார்த்தையை சட்டை செய்யாமல் தன் மனப் போக்காகவே திடீரென்று சென்று விட்டதை நோக்கிய மஞ்சுளா சொல்ல முடியாத துயரமடைந்தாள். துயரத்தை வாசகர்கள் யூகித்து அறிந்து கொள்வதே நலம். அவள் அன்றும் ஆகாரமே கொள்ளாது ஒரு லோட்டா சுத்த தண்ணீரைக் குடித்து சும்மா விருந்து விட்டாள். அன்றும் மணிவண்ணன் இரவு வீட்டிற்கு வரவில்லை. மைலாவின் வீட்டிலேயே பின் பாட்டுக்கற்றுக் கொள்வதும், எப்போதேனும் ஒரு வேளை வீட்டிற்கு வருவதுமாக இருந்தான். ஆபீஸுக்கும் செல்லாது ஒரு வார லீவையும் கழித்து விட்டான். வீட்டிற்கு வரும் நேரத்தில் வர வர மஞ்சுளாவிடம் தானுகவும் பேசுவதில்லை. அவளாக ஏதேனும் கேட்பதற்கும் பதில் கூறுது ஜாடையாகச் சென்றுவிடுவதுமாக இருக்கிறுன். ஒரு வார லீவு கழிந்தவுடனே ஒரு டாக்டரிடம் சர்டிபிகேட்டு வாங்கிக் கொடுத்து மூன்று மாத லீவுக்கு எழுதிப் போட்டுவிட்டான். தினம் வீட்டிற்கே வராது அவ் விடத்திலேயே இருப்பதற்கும் ஆரம்பித்து விட்டான்.

மஞ்சுளாவின் துயரம் சொல்ல இயல வில்லை. அவளுக்கு வீட்டில் சாமான்கள் ஆய்விட்டன. அவன் வாங்கிப் போடுவது மில்லை. பணமும் கொடுப்பதில்லை. வீட்டு வாடகை, வீடு கூட்டுகிறவளுக்குச் சம்பளம் முதலியவை கொடுக்காமையால் தினம் அவர்கள் வந்து தொந்தரை செய்கிறுர்கள். மணிவண்ணனே வீட்டில் அகப் படுவதே இல்லை. கேட்போரெல்லாம் மஞ்சுளாவையே கேட்கிறுர் கள். அவள் தனது மனே வேதனையோடு இந்தச் சங்கடத்தை சகிக்கவியலாது அபாரமான துயரமேற்கொண்டு சதா கலங்கிய படியே இருக்கிறுள். தன் நாயகன் எங்குதான் செல்கிறுன். என்ன செய்கிறுன் என்பதை விவர மறியாது துடிக்கின்றுள். இன்னிலை மையில் மணிவண்ணன் 2-3 நாள் வீடே வராது நிற்கவும் தலைப்பட்டு விட்டான். சில மாதங்கள் கழித்து ஒரு நாள்வீடுவந்த மணிவண்ண னைக் கண்ட மஞ்சுளா துயரம் தாங்காது கோ வெனக் கதறி யழுது

"ஹா! நாதா! இதென்ன பரிபவம்! என்னை இவ்விதம் பராமரித்து விடுவது தமக்கழகோ! தங்களுடைய அடிமையாகிய நான் என்ன செய்வேன்?" என்று அவள் சொல்லிக்கொண்டே வருவதைச் சிறிதும் காதில்வாங்காது விர்ர் என்று எழுந்து சென்று விட்டான்.

அந்தோ! மஞ்சுளாவின் மனம் அப்போது எவ்வித மிருக்குமென்பதை விவரிக்கக் கூடுமோ! தனது வார்த்தையைச் சிறிதும் சட்டை செய்யாது அலக்ஷியமாகத் தள்ளிவிட்டுச் சென்றதை எண்ணி அவளப்படியே ஹா வெனக் கதறியவாறு மூர்ச்சித்து பூமியில் விழுந்துவிட்டாள். பின்னர் சற்று நேரத்திற் கெல்லாம் தானே தெளிவு கொண்டு எழுந்து வருத்தமுற்று உட்கார்ந்திருந்தாள். அத்தருணம் மளிகைக் கடைக்காரன் அவ்விடம் வந்து மிகவும் அதட்டியபடியே "ஏனம்மா! இதென்ன என்னை ஏமாற்ற எண்ணமோ! முதல் தேதி பாக்கி கொடுப்பதுபோக மறுமாதமும் சென்று விட்டது. இன்னும் எனது பாக்கியைக் கொடாதிருப்பது வெகு அழகாக விருக்கிறது. நான் எவ்விதம் வியாபாரம் செய்வது? எந்தநேரம் வந்து கேட்டபோதிலும் "ஐயா இல்லை" என்று தந்திரமாக அனுப்பிவிட்டால் எனக்குப் பணம் வந்து சேரும் வழி எப்படி? இந்த விளையாட்டு வார்த்தை யெல்லாம் எனக்கு வேண்டாம். எனக்குச் சேரவேண்டிய பணத்தை வைத்தால் சரி: இல்லையேல் நான் தகுந்த நடவடிக்கை எடுத்துக் கொள்வேன். அவருடைய ஆபீஸுக்கே இச் செய்தியைத் தெரிவித்து வறுத்துவேன். எனக்குச் சேரவேண்டிய 50 ரூபாயை முன்னே வையுங்கள்" என்று மிகவும் கடுமையாயும் தாக்ஷணியமின்றியும் கேட்டான்.

இதைக் கேட்ட மஞ்சுளா ஆறாத் துயரம் மேலிட்டவளாய் வெகு மரியாதையாயும் இறைஞ்சியும் பேசத் தொடங்கி, "ஐயா! பெரியவரே! அடியாள் பேதை என்பதைப் பாராது தினம் தினம் இவ்விதம் கேட்டால் நான் என்ன செய்வேன்? என் கணவரையல்லாது என்னிடம் திரவியம் எவ்விதம் கிடைக்கும்? நான் அவரிடம் கூறினேன்; அவர் கவனியாதிருப்பதை நோக்கின் அவர் கையிலும் பணமில்லை யென்று தெரிகின்றது. ஐயா!

தயவு செய்து சற்றுப் பொறுத்துக்கொள்ளும். ஆபீஸுக்கு இச் செய்தியை அறிவிக்காதிருக்கும்படி வேண்டிக் கொள்கிறேன். என் ப்ராணபதியின் பெயருக்கு ஓர் இழிவைத் தேடாதீர்கள். தமக்கு மிகுந்த புண்ணியமுண்டு. இன்னும் ஒரு வாரம் கழித்து வாருங்கள். அதற்குள் நான் என் பர்த்தாவிடம் சொல்லி ஏற்பாடு செய்கிறேன். ஐயா! ஐயா! உம்மை நமஸ்கரிக்கின்றேன். அவர் முக்கியமான ஏதோ பெருத்த அலுவலி லிருப்பதால் இவற்றை யெல்லாம் மறந்திருக்கிறார் போலத் தோன்றுகின்றது. ஐயா! பெரியவரே! என்வேண்டுகோளுக் கிரங்கிப் பொறுக்கவேண்டும்.'' என்று கூறிக்கொண்டிருக்கையில் வீட்டு வாடகைக்காக வீட்டுக் காரன் வந்துவிட்டான். அவனைக் கண்டதும் நமது மஞ்சுளாவின் தேகமே நடுக்கலுற்றது. அவனும் மெத்த அதிகாரத்துடன், ''ஏனம்மா! இதென்னவேடிக்கை! எங்கள் ஜீவனம் இந்த குடிக் கூலியில்தானே நடைபெறுகிறதென்பதைத் தாங்களறிந்தும் மூன்று மாத பாக்கி 60 ரூபாயையும் தம்பிடி கொடாது இழுக் கடித்தால் எங்கள் கதி என்னவாகிறதென்று எண்ணுகிறீர்கள்? நானும் தினம் சொல்லிச் சொல்லிப் பார்த்தேன். வீணாக பஜித் செய்வது கூடாதென்று யோசித்துப் பேசாதிருப்பதனால் தங்கள் கையினின்றும் பணம் பேராது போலிருக்கிறதே. இனி எங்களால் பொறுக்க முடியாது. பணத்தை மரியாதையாக வைத்தால் போயிற்று. இல்லையேல் நான் வேண்டிய ஏற்பாடு எடுத்துக்கொண்டு உங்கள் சாமான்களை ஜப்தி செய்வேன். இப்போதே மறு பூட்டுப் பூட்டிவிடுகிறேன். எப்பொழுது வந்தாலும் 'அவரில்லை; அவரில்லை' என்பதுதான் வெகு அழகோ! அவரிருக்கும் வேளையில் பார்த்து வாங்கிவைத்துக் கொடுப்பதற்கு என்ன தடை? இனிமேல் எங்களால் சகிக்க முடியாது: பணத்தை வையுங்கள்'' என்று மிக்க கோபத்துடன் படபடத்துக் கேட்டான்.

சப்த நாடியும் ஒடுங்கித் தவிக்கும் மஞ்சுளா அந்த மனித னின் காலில் விழுந்து, வணங்கி எழுந்து கண்ணீர் பெருக்கி யவாறு ''ஐயா! தங்களுக்கு நாங்கள் செய்யும் அபராதத் திற்குத் தாங்கள் எவ்விதம் கூறியபோதும் கேட்டுக்கொள்ள வேண்டியதுதான். அபலையான ஏழை யான் என்செய்வேன்? எனது

கணவர் பணத்தைக்கொடுத்தால் நான் கொடாது வைத்திருப்பேனு! அவருக்கு ஏதோ முக்கியமான வேலையும் அபாரமான செலவுமிருப்பதால் சற்று பொறுத்துக்கொள்ளும்படியாகச் சொல்லச் சொன்னுர். ஐயா! தயவுசெய்து இன்னும் ஒரு வாரம் பொறுத்திருந்தால் அதற்குள் தங்களுக்குச் சேரவேண்டிய தொகையைச் செலுத்தி விடுகிறேன். மன்னிக்கவேண்டும்.'' என்று கதறினுள்.

வீட்டுக்காரன்:—என்ன! என்ன! உங்கள் கணவருக்கு முக்கியமான ஜோலியா! ஆமாம். அதுவும் வெகு முக்கியந்தானே! கோபால நாம்கார் தெருவில் ஓர் தாசியைக் கட்டிக்கொண்டு அழுவதுடன் தான் இதுபரியந்தம் கண்ணியமாகப் பிழைத்ததை மறந்து அந்த தேவடியாளுக்குப்பின் பாட்டுப் பாடப் பகிரங்கமாக வெளிவந்துவிட்டான். அதைவிட முக்கியமான வேலை உண்டோ! உம். ரதி போன்ற பெண்டை விட்டு சதிகாரத் தேவடியாளைச் சேர்ந்தான். அவனுடைய விதி இதுபோலும். இந்த அழுக்கை மறைத்துக் கூறும் உத்தமியாகிய உங்கள் முகத்தைப் பார்த்து இதுகாறும் பொறுத்தேன். எங்கள் வயிறு குல்லாவல்லவே! வயற்றின் கொடுமைக்காக தங்களுடைய கஷ்டத்துடன் எங்கள் உபத்திரவத்தையும் காட்டுகிறோம். தாங்கள் தெரிவித்தபடி சனிக்கிழமை தினம் வருகிறேன்''—என்று கூறிக்கொண்டே போய்விட்டார். மளிகைக் கடைக்காரனும் மஞ்சுளாவின் பரிதாபத்தைக் கண்டு இரங்கி அதிகமாகத் தொந்தரை செய்யாது சனியன்று வருவதாகக் கூறிச் சென்றுவிட்டான்.

அந்தோ! வீட்டுக்காரன் இப்படிக் கூறவே மஞ்சுளா "நமது சந்தேகம் நீங்கிவிட்டது'' என்றெண்ணி நொந்தாள். அவள் தேகத்தில் தணலின் மத்தியி லகப்பட்டதுபோல் எரிச்சலுண்டாயது. இன்னதென்று விவரிக்கவியலாத வேதனையும் சங்கடமும் பெருகின. அவள் தன்னைமீறி கோவென்று கதறி யழுது துடிக்கின்றுள். அவள் நல்லுணவருந்தி அயர்ந்து நித்திரைசெய்து மாதக்கணக்கில் ஆய்விட்டது. வீட்டிலிருந்த சாமான்களெல்லாம் ஆய்விட்டன. மணிவண்ணன் வீட்டையே மறந்து விட்டான். என்றுவது வீட்டுக்கு வந்தால் சரியாகப் பேசுவதுமில்லை;

நிற்பதுமில்லை. வீட்டில் சாமானில்லையே என்று மஞ்சுளா முறையிட்டால் சொற்ப சில்லரையை வைத்துவிட்டுச் செல்லவும், மற்றவற்றைக் காதில் வாங்கிக்கொள்ளாமல் அலக்ஷ்யஞ்செய்யவும் தலைப்பட்டான். இவன் எடுத்துக்கொண்ட மூன்றுமாத லீவும் கழிந்துவிட்டது.

மைலாவின் மையலில் மூழ்கி வெட்கத்தையும் விடுத்து பகிரங்கமாகக் கதைகளுக்குப் பின்பாட்டு பாடுவதற்குக் கிளம்பிவிட்டான். லீவு கடந்தபின்னர் ஆபீஸ் செல்வது அவனுக்குக் கஷ்டமாயிருந்தது. மைலாவைவிட்டு அந்தச் சொல்பநேரந்தான் ஏன் பிரியவேண்டுமென்று எண்ணினுன். மைலாவின் வார்த்தையைச் சிரசின் மேற்கொண்டு முதலில் வேலையை ராஜிநாமாச் செய்துவிட்டான். இந்த விஷயங்களொன்றையும் மஞ்சுளா அறியமாட்டாள். வீட்டுக்காரனும் கடைக்காரனும் சொல்லிச் சென்ற பின்னர் மணிவண்ணன் வீட்டுக்கே அதிகமாக வரவில்லை. என்னசெய்வாள் பாவம்!

"ஐயோ! கடைக்காரரும் வீட்டுக்காரரும் வந்துவிட்டால் என்ன செய்வேன்? என்பதி இல்லத்திற்கே வரவில்லையே! நாளை யவர்கள் வரும் நாளாயிற்றே. ஐயோ! ஜகதீசா! மகா உத்தமகுணமுடைய என்பதியுமா வேசி வீடுசெல்லும்படியாக மாறிவிட்டார்! அடடா! என்னவென்றுதான் என்கஷ்டத்தை நினைப்பேன்? ஆ! நாதா! தங்களை நான் சந்தேகித்தபோது தாங்கள் கூறியவையெல்லாம் கட்டுக்கதை என்று நான் சொன்னதற்கு என்னைவிட உயர்பொருள் தங்களுக்கு உலகிலில்லை என்று மொழிந்தீர்களே! தாங்கள் கூறிய வார்த்தையை வஞ்சகமென்று தாமறியாது தான் கூறினீர்களோ! ஐயோ! வெட்கக் கேடே! தமது கௌரவமெல்லாம் பறந்தோட ஓர் வேசியுடன் நட்பு கொண்டது போதாமல் அவளுக்குப் பின்பாட்டுமா பாடவேண்டும்? ஆகா! என்ன காலக்கொடுமை இது! என்ன தலைவிதி! ஐயோ! சர்வேச்வரா! உனது கூற்று இவ்வித அசங்கியத்தில் தானு செல்ல வேண்டும்? ஆ! நாதா! தமது சேவையே பெரிதென்றும், தமது உச்சிஷ்டமே ப்ரஸாதமென்றும் நம்பியிருந்த என்னை இரண்டினின்றும் நீக்க எப்படிமனம் வந்தது? அந்தோ! என்ன செய்

வேன்?'' என்றுகலங்கி இருந்த தறுவாயில் மணிவண்ணன் அவ்விடம் தோன்றினன்.

அவனைக்கண்ட மஞ்சுளா கோ வெனக் கதறியவாறு அவனிரு தாளேயும் பற்றிக்கொண்டு "ஆ! எனதின்ப வடிவே! என்னை இவ்விதமான ஹிம்சை செய்து எனது உயிராகியத் தம்மை கேவலமான வேசிக்கு ஒப்புவித்து வருத்துவதைவிட என்னுயிரைத் தமது காத்தினுல் மாய்த்துவிடக் கூடாதா! ஐயோ! நீரற்ற குளத்தில் மச்சமும், தாமரையும், ஆம்பலும் இருந்து தவிப்பதுபோல நீரற்ற இவ்வீட்டில் (என்தேகமாகிய வீட்டில் உயிரைவைத்து வசிக்க) வசிக்க என்னுல் முடியவில்லையே! நாதா! என்னிடம் எத்தனையோ கட்டுக்கதைகளைக் கூறி தாங்கள் வஞ்சகத்தை மறைத்தீர்கள். மறைத்தும் அது முற்றும் ப்ரசித்தியாகிவிட்டதே. அது இப்பாழும் செவிகளில் விழும்போது மனம் சகிக்கவில்லையே. தினம் உதயமாகி அஸ்தமித்தால் கடைக்காரன், வீட்டுக்காரன், வண்ணன், ஜவுளிக்காரன் முதலியோர் வந்து என்னை உபத்திரவம் செய்கிறர்களே! தங்களை யண்டிப்பிழைக்கும் இவ்வேழை எவ்விதம் உய்வேன்? என்னசெய்வேன்! பாவியாகிய என் வயிற்றிற்கு யாது வழி அறிவேன்! என் பரிபவத்தைக்கண்ட யாவரும் கலங்குகின்றர்களே! தங்கள் மனம் மாத்திரம் என் விஷயத்தில் இளகாதிருப்பதேனே தெரியவில்லையே! என்னுடைய சொத்திற்குப் போட்டியாக வந்துள்ள பாபி, சண்டாளி, த்ரோகி அவள் நாசமாய்ப்போக; அவள் நிர்மூலமாய்ப்போக. அவள் என்னை வஞ்சித்து என் வாழ்வைக் குலைத்து சுகமனுபவிக்கின்றதைத் தாம் கண்டு சந்தோஷங் கொண்டாலும் ஈசன் கண்டு பொறுப்பாரா! அவளை அதோகதியாகச் செய்துவிடமாட்டாரா! என் வயிற்றெரிச்சலும் கண்ணீரும் அவளை சும்மாவிடுமா! எரித்து நீராகச் செய்துவிடாதா!'' என்று மனம் போனபடி யெல்லாம் வயிற்றெரிச்சலுடன் கண்கலங்கியபடியே இருபாதத்தையும் பிடித்துக் கூறியதை யெல்லாம் சற்றும் கேட்கப் பிடிக்காத மணிவண்ணன் வெறுத்த பார்வையுடனும் சீறிய குரலுடனும் "சே! அப்பால் செல். பைசாசமே! வீடுவருவதற்கே ஆசையற்று விடும்படியாக ரோதனைசெய்து ப்ராணனை வாங்கு

கிருயா ! சீச்சீ ! விலகு'' என்று கூறியபடி காலினல் எட்டி உதைத்துத் தள்ளிவிட்டு உள்ளேசென்று அங்கிருந்த பெட்டியைத் திறந்து அதிலிருந்த சில பத்திரங்களேயும்மஞ்சுளாவின் விலேயுயர்ந்த சரிகை ஆடை யொன்றையும் எடுத்து மறைத்துக்கொண்டு பெட்டியைப் பூட்டிவிட்டுத் திரும்பினுன்.

எட்டி உதைக்கப்பட்ட மஞ்சுளா மெல்ல தட்டித் திணறி எழுந்து புலம்பியபடியே, மீண்டும் மணிவண்ணன் வழியை மறித்துக் காலேப் பிடித்துக்கொண்டு “ஆ! என் ப்ராணேசா! தாங்கள் அக்னி சாக்ஷியாகக் கைப்பற்றிய என்னே தற்போது விலக்கிவிட்டு அந்த மூதேவிக்கு உரித்தானவர் போல் சென்ருலும் அந்த வஞ்சிக்குத் தாம் ஒருபோதும் சொந்தமாக மாட்டீர்கள். தாங்கள் என்னவோ கடவுளறிய என்னுடைய உயிர் என்பதை மறக்காதீர்கள். வேசையர் நட்புகொண்டு நாசமாகிய மனிதர்களேத் தாம் கண்டும் கேட்டுமில்லேயா ! அவற்றையெல்லாம் தற்போது மறந்தீர்களோ! ஐயோ ! நாதா ! வேண்டாம். வீணுகப் படுகுழியில் விழுந்து பரிதபிக்க வேண்டாம். கையிலுள்ள பொருள் வற்றுதிருக்கும் வரையில்தான் விலேமாதர் நட்பு. வற்றிவிடின் நம்மைப்பற்றி இழுத்து சந்தியில் நிற்கச்செய்து விடுவாள். இதைப் பற்றி பட்டினத்தடிகள்,

நாவார வேண்டும் விதஞ்சொல்லுவாருனே நான் பிரிந்தாற்
சாவேனென்றே யிருந்தோக்க வுண்பார்கள் கைதான் வறண்டாற்
போய்வாரு மென்று நடுத்தலேக்கே குட்டும் பூவையருக்
கீவார் தலே விதியோ விறைவாகச்சியேகம்பனே.

என்று பாடி யிருப்பதையேனும் கவனிக்கலாகாதா?பணம் பறிக்கும் பரத்தையர் என்ற நாமம் அவர்களுக்கு மிகப்பொருத்தமும் அனுபவமும் என்பதை எண்ணிப் பாருங்கள்.கோவலன் கதியைப்பாருங்கள். டம்பாச்சாரி சரிதையை நினேயுங்கள். நாதா ! இந்தமட்டோடு தேறுங்கள்;வீணுக முற்றும்கெட்டு முழுகிவிட வேண்டாம்.''என்று கூறிக்கொண்டே வருகையில் மணிவண்ணனுக்கு அடங்காக் கோபமும் ஆத்திரமும் பொங்கி வந்துவிட்டன. அவன் தன்காலே

திமிறிக்கொண்டு "ஏ சனியனே! இனி உன் முகத்திலும் விழிப்பதில்லை. உன் வேதாந்த மெல்லாம் எனக்கு வேண்டாம். கேடுகெட்ட நாயே! நீயா எனக்குப் புத்தி புகட்டவந்துவிட்டாய்!" என்று கூறி அவள் தலை சிகையைப் பிடித்துத் தூக்கி உலுக்கித் தூரத் தள்ளிவிட்டுப் போய்விட்டான்.

ஆகா! அன்றில் பக்ஷியைப் போல கணவனிடத்தில் உயிரை வைத்துக்கொண்டிருக்கும் மஞ்சுளா தனது கதியையும் நிலைமையையும் எண்ணிக் கண்ணிர் ஓடவிட்ட வண்ணம் மூர்ச்சித்து விட்டாள். அத்தருணம் இவளுக்குத் துணைக்காக வந்த வேலைக்காரி இவளது பரிதாபத்தை எண்ணிக் கலங்கி இவளது மூர்ச்சையைத் தெளியவைத்தாள்.

கடைக்காரனும் வீட்டுக்காரனும் வரும் தினமும் வந்துவிட்டது. அன்று அவர்களுக்குப் பணங் கொடுக்காவிட்டால் அவர்கள் தன் கணவனை பஜித் செய்வது திண்ணம். தன் கணவனையும் காத்து அவர்கள் கடனையும் கொடுக்க என்னவிதமாக எற்பாடு செய்யலாமென்று வெகுநேரம் ஆலோசித்தாள். பின் ஒரு விதமான தீர்மானத்திற்கு வந்தவளாய் இருபத்தைந்து பவுன் பெறுமான தனது ஒட்டியாணத்தை எடுத்துத் தனக்கு மிகவும் நம்பிக்கையான வேலைக்காரியிடம் கொடுத்துக் கூலி யில்லாது பவுனுக்குப் பவுன் கிடைக்கும்படியாக விற்றுவரும்படி யனுப்பினாள். வேலைக்காரி பெரிய ஷாப்பில் அதைக் கொண்டுபோய் கூலி நீங்க விலைக்குச் சரியாக பணத்தை வாங்கிக்கொண்டு வந்தாள். அன்று பகலே கடன்காரர்கள் வந்து கூடிவிட்டார்கள். எல்லோருக்கும் சேரவேண்டிய தொகையைக் கொடுத்துவிட்டு வீட்டுக்காரரை நோக்கி "ஐயா! இந்த வீடு பூராவும் இனி எங்களுக்கு வேண்டாம். ஒரு பாகத்தில் இரண்டு அறைகளிருந்தால் போதுமென்று என் கணவர் தெரிவித்தார். ஆகையால் யாரையேனும் குடிக்கூலிக்கு வைத்துக் கொள்ளுங்கள்" என்று கூறினாள்.

எல்லோரும் பணத்தைப் பெற்றுக்கொண்டு, மஞ்சுளா தன் ...நவமாறி ஈன நிலைமையிலிருப்பதைக் கண்டு மனம் வருந்தினர்.

கடன் கொடுத்தது போக மிச்ச பணத்தைத் தனது காலக்ஷேபத்திற்கு வைத்துக்கொண்டு செலவு செய்து வந்தாள். மணிவண்ணன் அன்று சென்றவன் பின்னர் ஒரு மாதம் கழித்து ஒரு தினம் வீடு வந்து மஞ்சுளா தன்னைத் தடுக்க முடியாதவாறு சிடுசிடுத்தபடியே அவளது கைப் பெட்டியைத் திறந்து அதிலிருந்த அவளது காசு மாலையை எடுத்துக்கொண்டு போய் விட்டான். அவனுடைய பிதிரார்ஜிதமான பணத்தை வட்டிக்குக் கொடுத்திருந்ததைச் சிறிது சிறிதாக வாங்கி சேர்த்து முழுத் தொகையாக மைலாவுக்குச் சமர்ப்பித்து மகிழ்ந்து வருகிறான்.

மைலாவுக்கு மணிவண்ணனின் காதிலும் கரத்திலுமிருக்கும் வைரக் கடுக்கன், மோதிரம் இவற்றின் மீதே மனம் சென்றது. அவைகளை எவ்விதம் வாங்கலாம் என்ற யோசனையிலேயே யிருந்து சாமர்த்தியமாய் மோதிரத்தை ஸ்வீகரித்துக் கொண்டாள். கடுக்கனைத் தான் உபயோகிக்க ப்ரமேயமில்லாமையால் அதை எந்த விதம் வாங்குவது என்று வழி பார்த்துக் கொண்டே இருந்தாள். சில தாசிகள் வீட்டில் மாமாக்கள் இருப்பது போல் மைலா வீட்டிலும் ஒரு மாமா இருக்கிறார். அந்த மாமாவுக்கு மைலாவின் வீட்டில் சர்வ சுதந்தரமும் முதல் பீடத்துடன் உண்டு. உலகத்தை ஆக்கவும் அழிக்கவும் சாக்ஷாத் எம்பெருமானிருப்பது போல இந்த மாமாவுக்கு தனமுடைய மைனர்களை அழிக்கவும் அழகுடைய வேசிகளைப் புதுப்பிக்கவும் சக்தி யுண்டு. அத்தகைய மாமா மணிவண்ணன் தானாக வந்து வலையில் விழுந்ததைப் பற்றி மிகவும் மகிழ்ந்தவராய்த் தினம் மணிவண்ணனுடன் தந்திரமாகப் பேசி விட்டு காப்பி ஓட்டலுக்கு அழைத்துச் சென்று தன் வயிறு நிறையத் தின்று மணிவண்ணன் காசைக் கரைத்துச் செல்வது வழக்கமாய் விட்டது.

மணிவண்ணனுக்கோ தான் இவ்விதமான ஆபாசத்திலிறங்கி தனத்தைத் தண்ணீர்போல் கரைய விடுகிறோமே என்ற யோசனை சிறிது மில்லை. தனக்குச் சேரவேண்டிய ரொக்கப் பணத்தை எல்லாம் கரைத்துக் கொண்டே குசாலாக விருக்கிறான்.

மஞ்சுளாவோ மன வேதனையினாலும் உணவு நீக்கப்பட்ட தாலும் நாளைக்கு நாள் இளைத்துத் துரும்பிலும் துரும்பாக ஆய் விட்டாள். தான் எந்த வழியில் தனது நாயகனைக் கண்டு நல்வழிப் படுத்தலாம் என்ற யோசனையினால் பீடிக்கப்பட்டு வருந்தி யிருக் குந் தருணம் வீதிக் கதவை யாரோ தட்டியது கேட்டு எழுந்து திறந்தாள். ஓர் ஸேட் வீதியில் நின்று கொண்டு "அம்மா! மணி வண்ண ரெட்டியார் எங்கே! அவர் நமக்கு வெகு நாளாக பாக்கிக் கொடாது நிறுத்தி யிருக்கிறார். இதோ கணக்கில் பாருங்கள். ஆறு மாதத்திற்கு முன்னால் தனது சினேகிதர் ஒருவருக்காக விவா கத்திற்கு 400 ரூபாயிக்கு ஜவுளி எடுத்தார். அந்த தொகைக்குத் தானே உத்தரவாத மென்றும், அவர் கொடுத்து விடுவார் நம்பலாம் என்றும் கூறி எழுதிக் கொடுத்து, சரக்கு எடுத்துக் கொண்டு சென்றார். பின்னர் ஒரு மாதம் கழித்து 50 ரூபாய் கொடுத்தார். அதற்குப் பின் இதுபரியந்தம் பணத்திற்கு ஒருவிதத் தகவலு மில்லை. நான் மணிவண்ண ரெட்டியாருக்கு அனேக கடிதங்கள் வீட்டிற்கும் ஆபீஸுக்கும் போட்டேன். சற்றுப் பொறுத்துக் கொள்ளும் படிக்கும் சீக்கிரமே செலுத்தி விடுவதாயும் தெரிவித் தார். நாங்களும் பொறுத்துப் பார்த்தோம்; யாதொரு விவரமு மில்லை. சரக்கு யாருக்காக வாங்கப்பட்டதோ அவருடைய விலா சத்தை விசாரித்ததில் அவரை ஊரையே விட்டுக் கல்கத்தாவிற்கு மாற்றி விட்டதாகத் தெரிந்தது. பின்னர் இவர் தான் எங்களுக்கு ஜவாப்தாரி யாகையினால் இவரை மூன்று மாதத்திற்கு முன் நேரில் கண்டு விசாரித்ததில் கொடுப்பதாகக் கூறி முன்போலவே தெரிவித் தார். பிறகு இவருடைய தற்போதைய வரலாற்றை எல்லாம் கேள்வியுற்றோம். ஆபீஸில் விசாரிக்கச் சென்றேன். இவர் ஆபீஸ் வேலையையே ராஜிநாமாச் செய்து விட்டதாகத் தெரிந்தது. பிறகு அவரைப் பார்க்க முடியவேயில்லை. இனிமேல் எங்களால் பொறுக்க முடியாது. வீட்டில் உங்களிடம் தெரிவித்து விட்டு நாங்கள் எங்களு டைய வேலையைத் தொடங்கி ஜப்தி செய்யத் தீர்மானித்து வந் தோம். பணத்திற்கு என்ன வழி சொல்கிறீர்கள்?" என்று ...ட்டான்.

மஞ்சுளா வீதிக் கதவைத் திறந்ததும் ஆண் பிள்ளையா யிருக்கக் கண்டு கதவின் மறைவாகவே நின்றுவிட்ட படியால் அந்த ஸேட் இவளைப் பார்க்க முடிய வில்லை. ஸேட் கூறிய விஷயத்தையும் தன் புருஷன் வேலையை விட்டு விட்டுத் தாசி வீட்டோடு இருப்பதையும்கேட்டு அவள் திடுக்கிட்டுப்பிரமித்து நடுங்கிவிட்டாள். ஐயோ! தன் நாயகனின் நிலைமை இவ்விதமாகவா ஆகிவிட்டதென்று துடி துடித்தவாறு மெல்லிய குரலால் பேசத் தொடங்கி, "ஐயா! என் ப்ராணபதி வீட்டிலில்லை. அவர் வந்ததும் தெரிவிக்கிறேன். தாங்கள் சென்று நாளை வாருங்கள்" என்று கூறி கதவைத் தாளிட முயன்றாள். அந்த தருணம் ஸேட் அவளைப் பார்த்துவிட்டான். மஞ்சுளாவின் அபூர்வமான அழகைக் கண்டு மயங்கித் தியங்கி மறுமொழி கூறாது அவன் போய் விட்டான்.

மஞ்சுளா இந்த புதிய செய்தியைக் கேட்டதும் முன்னிலும் அதிகரித்த விசனத்துடன் நாளைக்கு அந்த ஸேட் வந்தால் என்ன செய்வது என்று யோசித்து வருந்தியபடியே அன்றைப் பொழுதைப் போக்கினாள். மறுநாள் உதயமானதும் ஸேட் அவ்விடத்திற்கு வந்து சேர்ந்துவிட்டான். அவனைக் கண்டதும் மஞ்சுளா கலங்கிய படியே, "ஐயா! என்பர்த்தா ஏதோ அவசர ஜோலியிலிருப்பதால் நேற்று வீட்டிற்கே வரவில்லை. இன்று வருவார்; அப்போது தெரிவிக்கிறேன். தயவு செய்து மன்னித்துக்கொண்டு நாளை வாருங்கள்" என்றாள்.

இதுகேட்ட ஸேட் நகைத்துக்கொண்டே "அம்மா! உங்கள் கணவர் வீட்டிற்கே வராது தாசி வீடடனிருப்பதை நானறிய மாட்டேனென எண்ணினீர்களா? தங்களைக் கேவலமாக வைத்திருப்பதையும் தங்களுடைய நினைவே அவருக்கில்லாமல் தங்களை மறந்திருப்பதையும் ஊர் முற்றும் அறியுமே! அம்மணி! பெண் பிள்ளையாகியத் தாங்கள் என்ன செய்யக்கூடும்? தங்களுடைய சௌந்தரியமும் யவ்வனமும் இவ்விதமாக துக்க சாகரத்தில் மூழ்காதபடி சந்தோஷமாகச் செலவாகும் வண்ணம் தங்களை நான் நடத்துகிறேன். தாங்கள் சற்றும் வித்யாசமின்றி எனது பங்களாவிற்கு வந்து விடுங்கள். அங்கு சகல சௌகரியமும் உங்களுக்குக் கிடைக்கு

இக்கடனுபத்திரவமும் நீங்கும்'' என்று வெகு துணிகரமாக முன் பின் யோசியாது திடீரென்று கூறிய வார்த்தையானது நமது மின்னுளின் மனத்தில் சுருக்கென்று ஈட்டிகொண்டு நாட்டியது போல வாட்டிவிட்டது. அவள் இருதயம் துடிதுடித்துக் கொதிக் கின்றது. அவளது தேக முற்றும் நெருப்புப் பிடித்து எரிவது போலான வேதனையுடன் ரத்தக் கொதிப்புடன் பொங்குகின்றது. அந்த நிலைமையில் அவள் ஆவேசங் கொண்டவள்போல் சீறி எழுந்து, "ஆகா! என்ன வார்த்தை கூறினீர்! என்ன எண்ணங் கொண்டீர்! உம்முடைய துராக்ருதமான வார்த்தையிலிருந்து நீர் என் பர்த்தா கொடுக்கும்படியாகக் கூறும் தொகையும் பொய் யென்று விளங்குகின்றது. உம்முடைய துர்க்குணத்திற் கிணங்கிப் பேசுமிடம் இதுவன்று. என்பதி என்னை விலக்கி யிருந்தாலும் கடுகு சேத்தாலும் காரம் குறையாது என்பதுபோல எனது மனமும் நிலைமையும் மாறவில்லை. ஜாக்ரதையுடனே வெளியில் செல்லும். என் பர்த்தாவிடம் இச் செய்தியைத் தெரிவித்து நாளைக்கே உம்மைச் சந்திக்கச் செய்கிறேன்.'' என்று கூறியவாறு சடேரென்று கதவைத் தாளிட்டுக்கொண்டு போய்விட்டாள். அந்தோ! புதிது புதிதாக வரும் செய்தியும் நடக்கும் வேடிக்கையும் காணக் காண அவள் மனம் கட்டு மீறிய கலக்கமடைந்து தவித்து உருகிக் கருகியது. "இந்த அநியாயமான செய்தியை என் பர்த்தாவினிடம் எவ்விதம் தெரிவிக்கின்றது?'' என்று யோசித்து வருந்தியபடியே இருந்தாள்.

அன்று பிற்பகல் வீதிக் கதவை யாரோ தட்டிய சத்தம் கேட்டு எழுந்து சென்று கதவைத் திடீரென்று திறக்காது யார் என்று வினவியபடியே கதவினிடுக்கினுல் பார்த்தாள். ஓர் கோஷா நிற்பதைக் கண்டு கதவைத் திறந்தாள். அங்கு நின்ற பீபி உள்ளே வந்தாள். மஞ்சுளா கலவரத்துடன் "இவ ளுக்கு நம்மிடம் என்னவேலை! ஆயினும் நடையிலேயே பேசி யனுப்பிவிடுவோம்'' என்று யோசித்தபடியே "அம்மா! தாங்கள் யார்? இங்கேயே உட்கார்ந்து பேசுவோம். எங்கு வந்தீர்கள்?'' என்றுள்.

பீபி:—அம்மா! நானும் உங்களைப் போன்ற பெண் பேதை யாகையினால் முக்கியமான விஷயத்தைப் பற்றி உங்களோடு பேசவே வந்தேன். நாம் இவ்விடத்திலிருப்பதை விட உள்ளே சென்று பேசுவதே உத்தமம். ஒருக்கால் என் புருஷன் வந்தாலும் வந்து விடுவார். எனது புருஷராகிய ஸேட் நேற்றும் இன்றும் உங்களிடம் வந்து பாக்கிப் பணத்தைக் கேட்டபோது உங்களைக் கண்டு மோகங் கொண்டதாக இன்று அவருடைய வார்த்தையினால் நான் யூகித்தறிந்தேன்—என்று கூறிக் கொண்டே கூடத்தை யடைந்தாள்.

இருவரும் அங்கு உட்கார்ந்தார்கள். பீபி மீண்டும் பேசத் தொடங்கி, "அம்மா! என் புருஷர் கேவலம் சிற்றின்ப ப்ரியர். இங்கு நடந்ததை அவர் வாயினால் கூறக்கேட்டதுடன், எங்கள் வண்டிக்காரன் அவர் உங்களிடம் அடாத வார்த்தை யாடியதையும் தாங்கள் அதற்கு வீரா வேசத்துடன் கடிந்து பதிலளித்ததையும் கவனமாய்க்கேட்டுக் கொண்டிருந்து என்னிடம் தெரிவித்தான். இது கேட்டதும் என் மனம் பதறியதால் நான் என் கணவனறியாது வெளிக்கிளம்பித் தங்களை எவ்விதத்திலேனும் காப்பாற்றவேண்டும் என்ற நோக்கத்துடன் வந்தேன். அம்மா! யாதுக்கும் பயப்பட வேண்டாம்." என்று கூறிக் கொண்டே வருவதைக் கேட்ட மஞ்சுளா மனதிற்குள் சொல்லவறியாத ஆனந்தம் மேலிட்டவளாயும் அந்த பீபியின் உயரிய நோக்கத்தைக் கண்டு வியந்தும் பேசத் தொடங்கி, "ஆ! அம்மா! தாங்கள் தற்போது நேரில் காண்பதற்கு பீபியாக விருப்பினும் தங்களை சாக்ஷாத் லோக மாதாவாக எண்ணி எனது மனப்பூர்வமான வந்தனத்தைச் செலுத்துகிறேன். என் தாயே! தாங்களே எனது ஈன்ற தாய் போலும். என்னிடரைக் காக்க வந்த காருண்யவல்லி தாங்கள் தான்" என்று தோத்திரம் செய்த படியே, அங்கு கூடத்தில் மாட்டப்பட்டிருந்த லக்ஷ்மி படத்தைக் குறித்து நமஸ்கரித்து எழுந்து நிமிர்ந்து பார்க்கும் போது அங்கு பீபியாக உட்கார்ந்திருந்த விடத்தில் அன்று காலையில் வந்த ஸேட் வெகு உல்லாசமாக நகைத்துக் கொண்டே தானணிந்திருந்த பீபி உடையை ஒரு கையில் பிடித்துக்கொண்டு, "அச்சா! அச்சா

மாயி!" என்று காம வெறி கொண்டு பார்த்தான். ஆகா! இந்த விபரீதமானதும் நம்பக் கூடாததுமான காக்ஷியைக் கண்ட மஞ்சுளாவின் அப்போதிய நிலைமையை விவரித்துக் கூறுவதை விட யூகித்தறிவதே மெத்த நலம். அந்தப் பாவியைக் கண்டதும் "ஹா!" என்று அலறியவாறு அபாரமான மனத்தாங்கலினால் வதைக்கப்பட்டு வேரற்ற மரம் போல அவள் மூர்ச்சித்து விழுந்து விட்டாள். மகா உத்தமியாகிய மஞ்சுளவல்லிக்கு இக்கதி நேர்ந்ததற்குக் காரணம் அந்த விலைமகள் மணிவண்ணன் மீது வீசிய வலையன்றோ!

182846

### ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள்
### எழுதிய அற்புதமான நாவல்கள்
### (சித்திரப்படங்கள் கூடியவை)

## சண்பக விஜயம்

இதுவரையில் எழுதி வெளிவந்த நாவல்களைவிட இதில், சிறுவரும், சிறுமியரும் உவந்து படிக்கவும், போற்றவும், படித்ததை நினைக்கவும், பிறருக்குச்சொல்லிப் புகழவும் தக்கபடி உயர்ந்த நீதிகளையும், உலகப்போக்கையும், கற்பின் பிரபாவத்தையும், பெரியாரின் பெருமையையும், நல்லோரின் நடவடிக்கைகளையும், உத்தம குணப்பெண்களின் இலக்ஷணங்களையும் அநேக மேற்கோள்களுடன் விளங்க வைத்திருக்கிது.

இதில் எந்தச் சம்பவமும் ஆச்சரியத்தை யுண்டாக்கக் கூடியதாயும், அறிவைப் புகட்டக் கூடியதாயும், தீயவருடைய மனதைத் திருத்தக்கூடிய வகையிலும் சிறந்து நிற்கும். விலை ரூ. 1-12-0.

நமது சந்தா நேயர்கட்கு ரூ. 1-8-0.

## வைதேகி

இதில் கதா நாயகியின் மன உறுதி, கற்பின் மாட்சி, உன்னத குணங்களின்உயர்ச்சி முதலியனவும் கதாநாயகி நாயகருடைய தெய்வீகக் காதலின் இலக்ஷணம். கிரைக்கார காமாக்ஷியின் உயரிய குணங்கள், துப்பறிபவரின் திறமையும், லொள்ளுதுரை, லோகாற்புதம் ஜமிந்தார், பொக்கைக் கிழவி, மார்வாடி, சாரங்கபாணி, ஊரளந்தான், அடியளந்தான் முதலியவர்களின் ஹாஸ்ய விநோத அற்புதச் செய்கைகளும் இன்னும் மற்ற ரஸங்களும் நிரம்பப் பெற்று ருசிகரமாக விளங்குகின்றன. இது அநேக பத்திரிகைகளாலும் பிரமுகர்களினாலும் மதிக்கப்பெற்றது. 540-பக்கங்கொண்ட இப்புத்தகத்தின் விலை ரூபாய். 2-8-0.

நமது சந்தா நேயர்கட்கு ரூ. 2-0-0.

## பத்ம சுந்தரன்

இதில் மேனாட்டு நாகரிகத்தின் ஆடம்பரமும், முடிவில் அதனாலடையும் துன்பங்களும், பண்டைக்கால பழக்கத்தின் பெருமையும், கதா நாயக நாயகியின் ஒவ்வொரு அம்சத்தின் உயர்ந்த நோக்கமும், காதலின் திறமையும், துப்பறிபவரின் விசித்திரமான செய்கைகளும், செல்லப்பாவின் அபாரமும், அவன் தன் தீயொழுக்கத்திலிருந்து உடனே திருந்துவதும், அவனது பெற்றோரின் நிலைமையும், மணத்தக்காளியம்மாள், சுண்டைக்காயம்மாள், அழுமூஞ்சி அண்ணாவி இவர்களின் ஹாஸ்யரஸப் பிரதானமான செய்கைகளும் இன்னுமற்ற ரஸபாவங்களும் படிக்கப் படிக்க சலிப்பென்பதே தராமல் ஆநந்திக்கச்செய்யும். விலை ரூ. 2-8.0.

நமது சந்தா நேயர்கட்கு ரூ. 2-0-0

"ஜகன் மோகினி" ஆபீஸ்,
26, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.

# அமிர்தாஞ்சனம்



எல்லா நோய்களுக்கும் திவ்ய ஔஷதம்

விலை அணா பத்து.

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்.

## அமிர்தாஞ்சன் டிபோ,

7, தம்புச்செட்டி வீதி, சென்னை.



Published by V. M. Parthasarathy Iyengar,
*for* "JAGANMOHINI OFFICE"
PRINTED AT THE TATA PRESS, MADRAS.